For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• நவம்பர் 2022

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 30





# ஆசிரியர் சுவடு

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

**கிறிஸ்துவுக்குள் அன்பான சுவடுகள் வாசகர்களே,**

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இம்மாத இதழ் நமக்கு மிக சிறப்பான மாதமாகும் பராபரனின் கிருபையினால் முப்பதாவது மாதமாகும். மிஷனெரிகள் மனித சமூகத்தை நெறிபடுத்துவதிலும், கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், தியாகத்தோடும் அர்பணிப்போடும் அன்று செய்த சவாலான முன்மாதிரி பணிகளை இன்றைய தலைமுறையினருக்கு மிஷனெரிகளின் கடின உழைப்பையும் தியாகத்தோடு கூடிய அர்பணிப்பையும் நாம் கொண்டு செல்ல வேண்டிய கடமையில் இருக்கின்றோம்.

வரும் நாட்களில் திருச்சபை வரலாற்றை எழுத ஊக்குவிக்கும் வகையில் மாவட்டம்தோறும் இளைஞர்களுக்கான பயிற்சி பட்டறை ஏற்படுத்தி அதன் மூலமாக புதிய எழுத்தாளர்களை உருவாக்கவும், நமது வரலாற்றுச் சங்க பத்து அம்ச செயல் திட்டங்களை விரைந்து செயல்படுத்தவும் முயற்சி எடுத்து வருகின்றோம். வரலாற்றுச் சங்க பணிகளுக்காக ஜெபித்து வருகின்றீர்கள்.

ஒவ்வொரு மாதமும் இதழினை வெளிக்கொண்டு வருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சந்தா, நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வரும் டிசம்பர் மாத தலைப்பாக **"திருச்சபை வளர்ச்சியில் அன்றும் இன்றும் வரலாற்று எழுத்தாளர்களின் பங்கு"** என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரைகளை எழுதி அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*manna selvakumar*

பாரபரனின் பணியில்

மன்னா செல்வகுமார்

**ஆசிரியர்**

சுஜித் ரெக்ஸ்

**வடிவமைப்பு**

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

**"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"**

மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள **G-Pay** மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்

காசோலை மற்றும் வரைவோலை செலுத்த 'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்' ( Tinnevelly Christian Historical Society ) என்ற பெயரில் எடுக்கவும்

A/c Name: Tinnevelly Christian Historical Society
A/c Number : 1748 020000 3684
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748


**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001
christianhistorical@gmail.com


christianhistoricalsociety.in
tchsportal.co.in

ஜே. பர்னபாஸ், M.Sc., சேலம் வரலாற்றுச் சங்கம்,

# நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன்

"நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்." - மத்தேயு 5 :6 (திருவிவிலியம்)



### உட்புகுமுன்:

கடந்த 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18 ஆம் நாள் 'தீக்கதிர்' என்ற நாளிதழின் தலைப்பில் "நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன்." என்ற பைபிள் வசனத்தைப் பார்த்து, வியப்படைந்தேன். தொடர்ந்து ஆர்வத்துடன் அந்த தலைப்பில் உள்ள கட்டுரையைப் படித்தபோது, அது அப்பொழுது காலமான முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் பாளையங்கோட்டை R. S. ஜேக்கப் வாத்தியார் (93) அவர்களின் இறுதி பேட்டி, அதை பிரசுரித்திருந்தார்கள்; அதன் முடிவில் தோழர் R. S. ஜேக்கப் "நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன்" (2 திமோ. 4:7) என்ற பைபிள் வசனத்தைச் சொல்லி முடித்திருக்கிறார். அதுவே அந்த அவரின் பேட்டியின் தலைப்பாகவும், ஏன் அந்த நாளிதழின் அன்றைய தலைப்பாகவும், காலமான தோழர் R. S. ஜேக்கப் அவர்களுக்கான ஒரு சிறப்பு அஞ்சலி செய்தியாகவும் அது அன்று இருந்தது.

### அரிவாள் கொடியின் கீழ் போராடினேன் :

தோழர் R. S. ஜேக்கப் போலவே அந்த காலத்தில் சேலத்திலும் ஒரு முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் இருந்தார். அவர்தான் பேராசிரியர் G. சாமுவேல், M. A., (1901-1974), அப்பொழுது அவர் சேலம் நகரவைக் கல்லூரியில் (இன்றைய சேலம் அரசு கலைக் கல்லூரி) தர்க்கசாஸ்த்ரம் (Logic) போதிக்கும் விரிவுரையாளராக பணியாற்றி வந்திருக்கிறார். அவர் மாணவர்களும், பொதுமக்களும், எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் "கம்யூனிசம் என்றால் என்ன?" என்ற தலைப்பில் ஒரு துண்டு பிரசுரத்தை எழுதி வெளியிட்டு அதை அனைவருக்கும் வினியோகித்தும் வந்திருக்கிறார். (He wrote a pamphlet "What is Communism?" it was an explanation for communism for the benefit of students and common folk) இவரது தீவிர கம்யூனிச பிரச்சார மற்றும் போராட்ட முன்னெடுப்புகள் சேலத்தில் கம்யூனிச சித்தாந்தத்திற்கான புரிதலுக்கும், பரவலுக்கும் அடித்தளமாக அமைந்தது. 1943 ஆம் ஆண்டு சேலத்தில் இவரும் இவரது தோழர்களும் இணைந்து தென்னிந்திய மாணவர் மாநாட்டை சிறப்பாக நடத்தினார்கள். (South Indian Students Convention at Salem in 1943). இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடைபெற்று வந்த அந்த நாட்களில் இவரோடு மற்ற கம்யூனிஸ்ட் தலைவர்களையும் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அப்போதைய ஆங்கில அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைத்தது. 1946-47 ஆகிய ஆண்டுகள் காலகட்டத்தில் சிறைவாசம் அனுபவித்த இவர் 1947 ல் இந்திய சுதந்திரத்தின் போது விடுதலைப் பெற்றார். (Salem City -An Ethno History (1792-1992)- K. Lakshminarayanan, T. Gangadharan, N. Chandrasekhar, -Vysya College, first edition 1999- page no. 101)

### பொதுவுடைமை கட்சியின் போராட்டங்களில்...

சேலம் மேக்னசைட் தொழிலாளர்களின் போராட்டத்தில் பங்கேற்ற பேராசிரியர் சாமுவேல் அவர்களின் கோரிக்கைகளுக்காக தனது தோழர்களுடன் தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளர்களின் போராட்டங்களை வழிநடத்தி வந்தார். நிர்வாகத்தாரின் அச்சுறுத்தல்கள், சாகசங்கள், எதுவும் எடுபடவில்லை. இறுதியில் தொழிலாளர்களின் ஒப்பந்த பணிமுறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வுடன், பணிநிரந்தரமும் சாத்தியமானது. தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் பல போராட்டங்களை முன்னின்று நடத்தி நீதிக்கான குரலாக பேராசிரியர் சாமுவேல் விளங்கினார். சேலம் மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டியாக, செயலாளராக, தலைவராக, பேராசிரியர் சாமுவேல் பணியாற்றிய காலங்களில் நீதிக்கான

வேட்கை கொண்டவராக தன் காலத்தில் தனது முயற்சிகளால் அநீதியை எதிர்த்து போராடி நீதியை நிலைநாட்டி சேலம் வரலாற்றில் இன்று நிலைத்திருக்கிறார். சேலம் வரலாற்றில் முக்கியமான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருந்தது மட்டுமல்லாது, தமிழகத்தின் வரலாற்றில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் முன்னோடித் தலைவர்களில் ஒருவராகவும் இவர் திகழ்கிறார். (சேலம் மாவட்ட கம்யூனிஸ்ட் இயக்கத்தின் எழுச்சிமிகு வரலாறு - என். ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளியீடு, முதல் பதிப்பு: ஆகஸ்ட் 2009 - P. nos. 37, 93, 151)

### சிலுவையின் நிழலில் இயேசுவின் அடிமை

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பேராசிரியர் G. சாமுவேல், இவரைப் பற்றிய தகவல்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக, பல்வேறு நூல்களில் காணக்கிடைக்கிறது. இன்று நம்மவர்களால் மறக்கப்பட்டு, சில ஆதிக்க சக்திகளால் மறைக்கப்பட்டு, புதிய நூலோர்களால் தங்கள் நூல்களில் இவருக்கு தகுந்த இடமளிக்காது விடப்பட்டு போனாரா? இவர்!. மேலும் இவரைப் பற்றிய தகவல்களைத் தேடி, ஒரு வரலாற்றுத் தேடலை மேற்கொண்டபோது, மேற்கொண்டும் காத்திருக்காமல், கிடைத்த தகவல்களைக் கொண்டு ஒரு கட்டுரையை எழுத என் மனதில் ஒரு எண்ணம் அதன் விளைவே இந்த கட்டுரை. இவரது ஒளிப்படத்தை தேடிக் கொண்டிருந்தபோது ஒருசமயம் சேலம் வரலாற்றுச் சங்க மூத்த உறுப்பினர் பேராசிரியர் J. ஜெயசீலன் (90) அவர்களிடம் இவரைப் பற்றிக் கேட்டபொழுது : பேராசிரியர் G. சாமுவேல் நமது சேலம் C.S.I கிறிஸ்துநாதர் ஆலயத்தின் உறுப்பினராக இருந்தார் என்ற தகவலை சொன்னார். தொடர்ந்து அவரது கல்லறையைப் பற்றிக் கேட்டபோது: பேராசிரியர் சாமுவேலின் கல்லறை சேலம் காக்கையன் காடு சேலம் C.S.I கிறிஸ்து நாதர் ஆலய கல்லறைத் தோட்டத்தில் முதல் நான்கு வரிசைகளில் **“அரிவாள் கொடியின் கீழ் போராடினேன்”** என்ற வாசகத்துடன் ஒரு கல்லறை இருக்கும் அதுவே அவரது கல்லறை என்று திருமதி S. ரூத் இரத்தினம் ஜெயசீலன் அம்மா அவர்கள் சொன்னார்கள் வியந்தேன். அவர்கள் சொன்னபடி கடந்த 14-10-2022 அன்று நான் மேற்கொண்ட அந்த தேடலில் பேராசிரியர் G. சாமுவேல் அவர்களின் கல்லறையை அங்கே




கண்டுபிடித்தேன். அந்தகால புத்தக சுருளை விரித்து வாசிப்பது போன்ற அமைப்பான சுருள் (Scroll) வடிவ தலைக்கல் கல்லறையின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது வாசகம் அது அவரே தனது வாழ்வின் சாட்சியாக எழுதிக்கொடுத்த வரிகள் : **‘அரிவாள் கொடியின் கீழ் போராடினேன்.**

**சிலுவையின் நிழலில் அமைதி கண்டேன்.**

**அன்று பொது உடைமை என்றேன்.**

**இன்று இயேசுவின் அடிமை ஆனேன். ’**

### நெல்லை அப்போஸ்தலன் 233 வது பிறந்ததினத்தில் ....

1836 ம் ஆண்டு இட்டமொழி அருகே நிலத்தை கிரயத்துக்கு வாங்கி, புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஜனங்களை அங்கு குடியமர்த்தி அக்கிராமத்திற்கு சுவிசேஷபுரம் என பெயரிட்டார். நெல்லை அப்போஸ்தலன் கனம் C.T.E. ரேனியஸ்.

அவருடைய பிறந்த தினமான இன்று சுவிசேஷபுரம் திருச்சபை மக்கள் அவரை நினைவுகூர்ந்து சுவிசேஷபுரம் ரேனியஸ் நினைவு நுழைவாயில் அருகில் அனைவருக்கும் இனிப்பு வழங்கி தங்கள் மகிழ்ச்சியை சேகர தலைவர் அருள்திரு வேதன்பு தலைமையில் வெளிப்படுத்தினர். அதோடு திருநெல்வேலி திருச்சபையில் அவர் செய்த இறைப்பணி, சமுதாய மற்றும் கல்வி பணிகளை நினைத்து இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.





பேரா. குட்டி ஜஸ்கர்,
போப் கல்லூரி, சாயர்புரம்.

# ‘இம்மானுவேலே வாரும் வாருமே’ (பாமாலை 46 )

திருச்சபையின் ஆண்டு வெவ்வேறு காலங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் முக்கியமானது ‘அட்வெந்து’ (கிறிஸ்துவின் வருகை) காலமும் ‘லெந்து’ (கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும்) காலமுமாகும். இவற்றைத் தவிர பல பண்டிகை நாட்களும், திருநாட்களும் உண்டு. ஆதித் திருச்சபையில் பண்டிகை நாட்களுக்கு முந்தின இரவில் ஒரு ஆயத்த ஆராதனை நடத்துவது வழக்கம். இன்று கூட சில சபைகளில் இந்த ஆயத்த ஆராதனை நடைபெறுவது உண்டு. இந்த ஆயத்த ஆராதனைக்கு விழிப்பு ஆராதனை (Vigil) என்று பெயர்.

கிறிஸ்து பிறப்பு தினத்துக்கு முந்தின நான்கு வாரங்கள் அட்வந்து நாட்களாக ஆசிரிக்கப்படுகின்றன. இந்த நாட்களில், மாலை ஆராதனைகளில், பரிசுத்த கன்னிமரியாளின் கீதத்துக்கு (magnificat) முன்னும், பின்னும் அந்த பண்டிகை காலத்துக்குப் பொருத்தமான ஒரு வசனம் பாடப்படுவது வழக்கம். சபையார் இருபகுதியாக அல்லது குருவானவரும் சபையாருமாக இதை மாறி மாறிப் பாடுவார்கள். இப்பாடலுக்கு ஆங்கிலத்தில் ‘Antiphon’ என்று பெயர்.

அட்வந்து நாட்களில் அந்திபன் 'ஓ' என்ற ஒரே எழுத்தில் அமைந்திருந்தது. 'ஓ' என்பது வேதனையின் குரல், திருச்சபையின் மணவாளனான கிறிஸ்துவின் வருகைக்கு ஆவலுடன் காத்திருந்த சபையின் வாஞ்சையையும் தவிப்பையும் இந்த 'ஓ' என்ற குரல் குறிப்பிடுவதாக இருந்தது. சில காலத்துக்குப்பின் 'ஓ' என்ற இவ்வெழுத்தோடு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் சிறப்பு பெயர்களாகிய

- O Emanuel - இம்மானுவேல்
- O Thou Rod of Jesse - ஈசாயின் வேர்துளிரே (ஏசாயா 11:1)
- O Thou Day spring - அருணோதயமே (லூக்கா 1: 78, 79)
- O Thou Key of David - தாவீதின் திறவுகோலே (ஏசாயா 22: 22)
- O Lord of Might (யாத்திராகமம் 19: 16)

சேர்த்து அந்திபனாக பாடினார்கள். இன்னும் சில காலங்களுக்குப் பின், இந்த அந்திப் பன்களுடன் ஒரு சிறிய ஜெபமும் சேர்த்து பாடப்பட்டது. கிறிஸ்து பிறப்புக்கு முந்தின ஏழு நாட்களின் மாலை ஆராதனைகளில், ஒவ்வொரு நாளும் ஓர் அந்திபன் பாடல் மட்டும் பாடப்பட்டது.

அநேக ஆண்டுகளுக்குப்பின், பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒரு பக்தன் இந்த ஐந்து அந்திபன்களையும், ஐந்து கவிகளுள்ள ஓர் அட்வெந்து பாடலாக எழுதினார். இது லத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்ததால் லத்தீன் சபைகளில் மட்டும் பாடப்பட்டு வந்தது. இப்பாடல் அட்வெந்து நாட்களுக்கேற்ற ஒரு பாடலாக இருந்ததால், பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஜான் மேசன் நீல் பண்டிதர் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதுதான் அட்வெந்து நாட்களில் நாம் பாடும் 'இம்மானுவேலே வாரும் வாருமே' என்ற பாடல்.

ஜான் மேசன் நீல் பண்டிதர் 1818 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 28ம் தேதி லண்டன் மாநகரில் பிறந்தவர் (28.01.1818). அவரது தந்தை ஆங்கிலச் சபையைச் சேர்ந்த ஒரு போதகர். ஜான் மேசன் நீல் கல்லூரிப் படிப்பைக் கேம்பிரிட்ஜ் திருத்துவக் கல்லூரியில் முடித்தார். இங்கு மாணவராய் இருந்தபோது கிறிஸ்துவச் செய்யுள் எழுதும் போட்டிகளில் பதினொருமுறை (11) பரிசுகள் பெற்றார். திருச்சபை முறையில் 'ஆக்ஸ்வர்டு குழு' வை அவர் ஆதரித்ததால் ஆங்கிலச் சபையில் உயர்பதவிகள் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. உடல் நலம் குன்றியதால், இரு ஆண்டுகள் ஸ்பெயின் நாட்டில் வசிக்க வேண்டி வந்தது. அவர் ஒரு சிறந்த கல்விமான். ஆங்கிலம் உள்பட 20 மொழிகள் கற்றிருந்தார். திருச்சபை வரலாறு, ஆலயக் கட்டிடங்கள் முதலிவற்றைக் குறித்த பல நூல்கள் எழுதியிருந்தார். மேலும் பல பாடல்களை எழுதியதுடன், கிரேக்க லத்தீன் மொழியிலிருந்து ஏராளமான பாடல்களை மொழிபெயர்த்தார். அவற்றுள் 'உயிர்த்தெழும் காலைதனில்' (பாமாலை 396), 'ஓசன்னா பாலர் பாடும்' (பாமாலை 92) 'துக்க பாரத்தால் இளைத்து' (பாமாலை 282) மிக முக்கியமான பாடல்களாகும்.

அவரது சிறந்த அறிவையும், கிறிஸ்தவ சேவையையும் பாராட்டி, அமெரிக்காவிலுள்ள ஒரு பல்கலைக் கழகம் அவருக்கு பண்டிதர் (Doctor of Divinity) பட்டம் அளித்தது. ஜான் மேசன் நீல் பண்டிதர் 1866 ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 6ம் தேதி ஈஸ்ட்டு கிரின்ஸ்டெட் என்னுமிடத்தில் தமது 48 ம் வயதில் (06.08.1866) காலமானார்.

இப்போதும் இப்பாடல் பல பிறமொழிகளில் ஓர் அட்வெந்து காலப் பாடலாக பாடப்பட்டு வருகிறது. நாமும் அட்வெந்து ஞாயிற்றுக் கிழமை அன்று இப்பாடலை பாடலாமே!

மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 59 : 20

தேவனுக்கே மகிமையுண்டாவதாக.


## G-pay (Google Pay) மூலமாக சந்தா நன்கொடை அனுப்ப .....

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

'வரலாற்றுச் சுவடுகள்' – மாத ஆய்விதழுக்கென்று
G-pay(Google Pay) மூலமாக நன்கொடை அனுப்ப விரும்புகிறவர்கள்,
91767 80001 என்கிற இந்த எண் மூலமாகவும் அனுப்பலாம். நீங்கள் சந்தா நன்கொடை அனுப்பிய பின்பு,
அதைக் குறித்த முழு விபரங்களை இதே எண்ணில் தொடர்பு கொண்டோ,
அல்லது இதே எண்ணிற்கு WhatsApp மூலமாகவோ, அல்லது christianhistorical@gmail.com
மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

OCTOBER 1922 - OCTOBER 2022



(1865-1922).

ஸ்டீபன் இன்பநாதன்,
மதுரை

அமெரிக்க நாட்டு இறைப்பணியாளர்

# மறைதிரு. அறிவர் வில்லியம் மைக்கேல் ஜம்புரோ

அமெரிக்க நாட்டு இறைப்பணியாளர்கள் 1834 ஆம் ஆண்டு முதல் மதுரையில் பணி செய்து வந்தனர். அவர்கள் வந்த நாள் தொடங்கி நற்செய்தி பரவுதலை வெகு சிறப்பாகத் தொடங்கினர். தேவாலயங்கள் மற்றும் சபைகள் நிறுவினர். அதே வேளையில் இறைப்பணியாளர்கள் கல்வி நிறுவனங்கள், பயிற்சிப் பள்ளிகள், மருத்துவமனைகள், இருபாலருக்கான தொழிற்பயிற்சிப் பள்ளிகள் இறையியல் கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பசுமலை கல்லூரி) தொடங்கினர். இந்த இறைப்பணியாளர்களில் குறிப்பிடத்தக்கவர் மறைதிரு வில்லியம் மைக்கேல் ஜம்புரோ அவர்கள். இவரது நூற்றாண்டு நினைவு நாள் அக்டோபர் 17, 2022.

இவர் அமெரிக்காவில் நவம்பர் 27, 1865 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் மெக்ஸிகன் கொலம்பியா மற்றும் ஏல் பல்கலைக்கழகங்களில் பயின்றவர். 1894 ஆம் ஆண்டு மதுரைக்கு இறைப்பணியாளாக வந்தார். நவம்பர் 13, 1907 ஆம் ஆண்டு திருமணம் புரிந்தார். அவருக்கு கேத்தரின், எலிசபத் ஆகிய பெண்பிள்ளைகள் மதுரையில் பிறந்தனர். அன்னாரின் காலத்தில் பசுமலை கல்லூரி செயல்பட்டது. சுமார் 20 ஆண்டுகள் ஆயினும் இக்கல்லூரி குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடையாமல். தேங்கிய நிலையில் இருந்ததைக் கண்டு ஜம்புரோ மனம் வெதும்பினார். இந்தச் சூழ்நிலையில் ஜம்புரோ வந்து சுமார் ஆறு ஆண்டுகளுக்குள் 1899 ஆம் ஆண்டு கல்லூரியின் முதல்வராக நியமிக்கப்பட்டார். கல்லூரியை மதுரைக்கு கொண்டு செல்லலாமே என்ற கருத்தினை ஆணித்தரமாக முன்மொழிந்தார். அந்த நாட்களில் பசுமலை வாசிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனாலும் மேற்கொண்ட முயற்சியில் மனம் தளராமல் செயல்பட்டு தல்லாகுளத்தினருகே இறைப்பணியாளார்களால் ஏற்கெனவே வாங்கப்பட்ட 15 ஏக்கர் நெல்பயிரிடும் நிலத்தில் கல்லூரி செயல்படத் தீர்மானித்தார்.

இதற்குச் சக இறைப்பணியாளர்களும் அந்த நிலத்தின் முந்தைய உரிமையாளர்களும் இந்த இடம் கல்லூரி கட்டுவதற்கு சாத்தியமற்றது என்று கூறி அவரது முயற்சிக்கு முட்டுக்கட்டை இட்டனர். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் மேற்படி இடத்தில் ஜெபத்துடனும் விசுவாசத்துடனும் Main Hall ஐ கட்டத் தொடங்கினார். இக்கட்டிடம் 2 ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்டது. இந்த பிரமாண்டமான கட்டிட மங்கலப் படைப்பு ஆராதனையில் அவர் செய்த இறை வேண்டலின் சாராம்சம்: **"சேவையின் ஆவி எப்போதும் இங்கு நிலைத்திருக்கட்டும் சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பம் மக்களின் இதயங்களில் வலுவாக இருக்கட்டும்"** என்பதே பிரார்த்தனையின் மையமாக இருந்தது. உண்மையிலும் நேர்மையிலும் அன்பிலும் நிலைத்த இந்த பணியானது கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையேயான நட்புறவின் பிணைப்பாகவும் மேலும் மேற்கு நாடுகளின் புதிய நாகரிக வளர்ச்சியின் வளர்ச்சிக்கு ஏற்பவும் இருக்கட்டும். அது இந்தியாவின் மீட்புக்கு மேலும் உதவிகரமாக இருக்கும். தேவனின் ஆசீர்வாதம் வரவிருக்கும் ஆண்டுகளில் இங்கு நிலைத்திருக்கட்டும். இருண்ட இடங்கள் வழியாகப் பயணம் செய்யும் போது வழி காட்டியாக இருந்து கடினமான இடங்களை கடக்க உதவி செய்க. மக்களின் இதயங்கள் உயர்ந்த இலட்சியங்களாலும், திடமான உறுதியினாலும், உண்மையின் மீது அளவு கடந்த பக்தியினாலும் நிரம்ப உமது ஆவி உதவட்டும். அதுவே இறையரசின் பெயர் இங்கு



சமீபத்தில் இவரது பேரன்கள் வில்லயம் ஹோவர்ட் ரிச்சர்ட்சன், மைகேல் ஆஸ்டின் ரிச்சர்ட்சன், பேத்தி ஹட் ரால்ஸ்டன் கொள்ளு பேரன் மைகேல் ட்வைட் ரிச்சர்ட்சன் மதுரைக்கு வந்திருந்த போது எடுத்தப் படம்.

நிற்பதற்கு உதவியாக இருக்கும். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஆமென்.

கனம் ஜம்புரோ அவர்கள் ஓர் நல்ல புகைப்பட கலைஞர். இவரின் மதுரையைக் குறித்த புகைப்படங்கள் National Geographic, 1909 இதழ்களில் வெளிவந்துள்ளது.

ஜம்புரோவிற்கு குறிப்பாக மற்றொரு பக்கமும் உள்ளது. அவரது சொந்த கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களை நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் மத்தியில் அவரைச் சுற்றியுள்ள உயிர்கள் மற்றும் மக்கள் மீது பச்சாதாபத்தை உணரும் திறனைக் குறிக்கிறது. இது தலைமை அலுவலகம் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு எழுதிய ஆரம்பக் கடிதங்களில் பிரதிபலிக்கிறது. 1894 இல் ஜம்ப்ரோ முதன்முதலில் பசுமலைக்கு வந்தபோது தனது சுற்றுப்புறங்களைப் பற்றி குறிப்புகளை உடனடியாக எடுக்கத் தொடங்கினார். தனது புதிய சூழலின் விவரங்களை உள்வாங்குவதில் குறிப்பிடத்தக்க திறமையைக் கொண்டிருந்தார். விதிவிலக்காக நல்ல கண்காணிப்புத் திறமையும் கொண்டிருந்தார். அவர் விரைவில் தன்னைச் சுற்றி நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஆற்றல் மிக்க வாழ்க்கையை உருவாக்கினார்

ஜம்புரோ தன்னைச் சுற்றியுள்ள இந்திய கலாச்சாரம் மற்றும் தன் விசுவாசம் நம்பிக்கை மற்றும் அன்பின் கிறிஸ்தவ போதனைகளை உறுதியாகப் பின்பற்றும் முறை மத்தியில் எப்போதும் சமநிலையை ஏற்படுத்தினார். அத்தகைய மனப்பான்மை அவரது தலைமைப் பதவிக் காலத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் அவருக்கு வளர்த்த மரியாதைக்கு பங்களித்தது நல்ல இறைப்பணியாளர், இறைப்பணிகளில் வைரமாக ஜொலித்தவர் இதய வியாதியினால் வருந்தி தமது 57ம் வயதில் (அக்டோபர் 17, 1922) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

1911 ல் மறைதிரு வில்லியம் மைக்கேல் ஜம்புரோ அவர்கள் எழுப்பிய சிற்றாலயம் அன்னாரது பெயரில் மதுரை கோரிப்பாளையம் ஜம்புரோ புரத்தில் உள்ளது.

## நெல்லை அப்போஸ்தலன் 233 வது பிறந்ததினத்தில் ....

இன்று (05-11-2022) திருநெல்வேலி அப்போஸ்தலன் C.T.E. ரேனியஸ் (1790-1838) ஐயரின் (1790-1838) 233 வது பிறந்த தினம். அவருடைய நினைவிடத்தில் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் சார்பாக டாக்டர் வசுந்தரன் சீனிவாசகம் அவர்கள் தலைமையில் மிஷனரி செய்த பணிகளை நினைவு கூர்ந்து மலர் வளையம் வைத்த பொழுது உடன் நெல்லை திருமண்டல குருவானவர் அருள்திரு ஜெபரத்தினம் ஐயா அவர்கள் மற்றும் திருமண்டல பேராலய உபதேசியார் தனபாலன் அவர்கள் மற்றும் மன்னா செல்வகுமார் உடனிருந்தனர்.



# தேவாலயத்தை காத்த காரிகை

ராஜ்ஜா
புதுச்சேரி

மேற்கு ஆஸ்டிரியாவில் ஒரு மலைநாடு. டிர்ரல் என்று பெயர். வடக்கே ஜெர்மனி, தெற்கே இத்தாலி. இரண்டு பெரிய ரொட்டித் துண்டுகளுக்கு நடுவே இருக்கும் வெண்ணெயைப் போன்றதொரு வெண்பனி படர்ந்த மலைநாடு இந்த டிர்ரல். இங்கு மக்கள் பேசுவது ஜெர்மன் மொழிதான். இத்தாலிய மொழி இவர்களை கொஞ்சம் கூட பாதிக்கவில்லை என்றாலும், இவர்கள் பேசும் ஜெர்மன் மொழியை இம் மலைநாட்டுக்கு சுற்றுலா வரும் ஜெர்மனிக்காரர்களால் கூட அவ்வளவு சீக்கிரம் புரிந்து கொள்ள முடியாதாம். ஏன்? டிர்ரல் நாட்டிலேயே வசிக்கும் இரண்டு மலைவாசிகள் சந்தித்து பேசினால் கூட ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வார்களா என்பது சந்தேகமே, என்று அங்கு பயணித்தவர்கள் தங்களது குறிப்பேடுகளில் பதிவு செய்திருக்கிறார்கள்.

கி.மு. முதலாம் நூற்றாண்டிலேயே ரோமாபுரி சாம்ராஜ்யத்தோடு வணிகத் தொடர்பு வைத்திருந்த நாடு டிர்ரல் என்று சொல்கின்றனர் சரித்திர வல்லுநர்கள்.

சரித்திரப் புகழ் பெற்ற இந்த டிர்ரல் எனும் மலைநாட்டில் கேத்தரினா லான்ஸ் (1771-1854) என்ற பெண்மணிக்கு அழியாப் புகழ் கிடைத்திருக்கிறது. இன்றும் இங்கே சிலையாய் நிற்பவளைப் பற்றி எண்ணற்ற பாடல்களால் புகழாராம் சூட்டியிருக்கிறார்கள் கவிஞர்கள். எல்லாம் டிர்ரல் மொழியில்தான். கன்னியாகுமரியில் பேசப்படும் தமிழை சென்னை வாசி புரிந்து கொள்வது சிரமம். புதுச்சேரி தமிழை திருநெல்வேலிக்காரர் புரிந்து கொள்வது சிரமம். இருந்தும் அனைவரும் தமிழர்களே. பேசும் மொழி தமிழ். நமது தமிழைப் போலத்தான் டிர்ரல் நாட்டில் பேசப்படுகிறது ஜெர்மன் மொழி. இது பல வகையாக பேசப்படுவதால், அவ்வளவாக இப்பாடல்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்படவில்லை என்கிறார்கள் இலக்கிய வரலாற்றாசிரியர்கள்.


இருந்தும் கேத்தரினாவின் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது என்று சொல்கின்றனர் பெண்ணியவாதிகள்.

எல்லாம் கொடுப்பனைதானே. கேத்தரினாவின் புகழை அவளது பிள்ளைகளும், பின்னர் பேரப்பிள்ளைகளும் பாடி மகிழ்ந்ததை தன் கண்களால் பார்த்து, காதுகளால் கேட்டு ரசிக்க கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?

அந்த பெருமைக்குரிய சம்பவம் நடக்கும் போது கேத்தரினாவிற்கு வயது 22 தான். பொது மக்களின் கண்களுக்கு அவள் ஒரு ஹீரோவாக தெரிந்த பின், அவள் இன்னுமொரு 60 ஆண்டுகள் மதிப்பும் மரியாதையோடும் வாழ்ந்தாள் என்பதும் கொடுப்பனைதானே. உயிரோடு இருக்கும் காலத்திலேயே தன் சிலையை பார்த்து பெருமைப்பட்டுக் கொள்வதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?

அப்படி என்னதான் சாதனை புரிந்தாள் என்று கேட்கத் தோன்றுமே. கேத்தரினா வசித்த கிராமத்தில் இருந்த தேவாலயம் ஒன்றினை சரியான முறையிலே எதிரிகளிடமிருந்து பாதுகாத்தாள் என்பதே அவளின் சாதனை.

இதெல்லாம் ஒரு சாதனையா என்று கேட்கத் தோன்றினால் தயவுசெய்து





கடவுள் உருவங்களையே 'நம்ம சாமிகள்' என்று வழிபட்டு வந்தவர்கள் கத்தியையும் கேடயத்தையும் எடுத்துக் கொண்டு தடுக்க முயன்றனர். ரத்தம் சிந்தி, தலை உருண்டு தோற்றுப் போனது தான் மிச்சம். அப்படி போராடி மாண்டவர்கள் ஒரு சிலரே. பலரோ, 'அட போய்யா! எல்லா சாமியும் ஒரு சாமிதான். நேற்றுவரைக்கும் ரோம சாமி. இன்றைக்கு கிறிஸ்துவ சாமி. எல்லாம் நம்ம பாடுபட்டு உழைத்தால்தான் அடுத்த வேலை கஞ்சி. எந்த சாமியும் நமக்கு கஞ்சி கொண்டுவந்து கொடுத்துடாது. இதுல எதுக்கு வீணா அடிச்சிக்கிட்டு சாகணும்?' என்று கருத்து தெரிவித்து ஒன்று கூடி புதிய மதத்தை ஏற்றுக் கொண்டனர்.

'பைபிளைப் பிடி. இல்லையேல் செத்து மடி' என்று சொல்லிக் கொண்டு வந்தவர்களிடம் இன்முகம் காட்டிய டிர்ரல் மக்கள் மகிழ்ச்சியோடே வாழ ஆரம்பித்தனர். எல்லா சுகதுக்கங்களுக்கும் மனம் தானே காரணம்.

சுகமோ துக்கமோ நிலைத்ததாய் சரித்திரமே இல்லையே. டிர்ரல் மக்களின் திருப்புமுனையாக அமைந்த கிறிஸ்துவம் அவர்களுக்கு பல நூற்றாண்டு காலம் சுகமாக இருக்க வழிவகை செய்தது. அவர்களின் அமைதியைக் கெடுக்க ஏதோ ஒன்று விஸ்வரூபம் எடுத்து வந்தது. அதுவே பிரெஞ்சு புரட்சி.

பத்து ஆண்டுகள், ஆறு மாதங்கள், நான்கு நாட்கள் (மே 5, 1789 - நவ 9, 1799) நடந்த பிரெஞ்சு புரட்சி, அந்நாட்டின் தீவிர அரசியல் சமூக மாற்றத்தின் காலகட்டமில்லையா? சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்கிற மும்மூர்த்திகள் அசுர பலம் பெற்ற காலகட்டமில்லையா? நிலப்பிரபுத்துவத்தை ஒழித்தல், பிரான்சில் கத்தோலிக்க திருச்சபையின் மீது அரசின் கட்டுப்பாட்டை திணித்தல், அத்தோடு வாக்களிக்கும் உரிமையை நீட்டித்தல் போன்றவைகளை வெகு வேகமாக செயல்படுத்திய காலகட்டமில்லையா?

கேட்டுவிட வேண்டாம். சாதனை என்பது மற்றவர்களால் செய்ய முடியாததை செய்து காட்டுவதே. அதுவும் மீசை முறுக்கி, துள்ளிக் குதித்து தொடை தட்டி வாளேந்தும் ஆண்களே பயந்து ஓரம் ஒதுங்கும் போது, மன தைரியத்தை மட்டுமே துணைக்கு அழைத்துக் கொண்டு, எதிரிகளின் வாள் வீச்சிற்கு கேத்தரினாசவாலாய் அமைந்தாள் என்பதை சாதனை என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல!

டிர்ரல் மக்கள் அமைதி விரும்பிகள். சகிப்புத் தன்மை மிக்கவர்கள். நாய் குலைத்தால் திருப்பிக் குலைப்பது நாயாகத்தான் இருக்க வேண்டும் என்கிறது இவர்களின் பழமொழி ஒன்று. துஷ்ட மனிதர்களைக் கண்டால் தூர விலகிவிடுபவர்கள் தான் இவர்கள். இருந்தும் கேடுவிளைந்தால் அதை வேரோடு அறுத்து எரித்துச் சாம்பலாக்கும் மனபலம் கொண்டவர்கள்.

ரோமாபுரி சாம்ராஜ்யத்தின் கீழ் பலகாலம் இருந்தது டிர்ரல், அப்பேரரசு வீழ்ந்ததும் (கி.பி.476) கிறிஸ்துவ மதம் அங்கே வேரூன்ற ஆரம்பித்தது. தேவாலயங்கள் நிறுவப்பட்டன, வீதிக்கு ஒன்று என்று சொல்வதைப் போல், கிராமத்திற்கு ஒன்று.

சண்டை போடாமல் சச்சரவு இல்லாமல் எதைத்தான் நிறுவ முடியும்? யார் யாருடன் மோதுவது? ரோம் நாட்டாரின்

இந்த காலகட்டத்தில்தான் டிர்ரல் மக்களின் சந்தோஷமான வாழ்க்கை பாதிப்புக்குள்ளானது. அவர்களுக்கு மீண்டும் ஒரு சோதனைக் காலம். சோதனைகளை கடந்து செல்வதுதானே வாழ்க்கையே.

1797-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி உச்சகட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தத் தருவாயில்தானா ஆஸ்டிரியா, பிரிட்டன், பிரஷியா போன்ற வெளிநாடுகளில் இருந்து எதிர்ப்பு குரல் வெடிக்க வேண்டும் ! பிரெஞ்சுக்காரர்கள் **'செய் அல்லது செத்து மடி'** என்ற கொள்கையை தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்களாயிற்றே. சிகப்புக் கொடி காட்டுபவர்களையும் வெள்ளைக்கொடி காட்டவைப்பவர்களாயிற்றே!

**என்னோடு கை கோர்த்தால் நீ என் நண்பன். இல்லையேல் நீயே என் முதல் விரோதி,** என்று சொன்ன பிரெஞ்சுக்காரர்கள் மன்னராட்சியைக் கலைத்து, பதினாறாம் லூயி மன்னரை தூக்கிலிட்டுவிட்டு, எதிர்ப்புக்குரல் கொடுத்த

நாடுகளை துவம்சம் பண்ணத் துவங்கினர். இந்த வீர விளையாட்டினை ஆஸ்டிரியா நாட்டிலேயே துவக்கினர். அவர்களது திட்டமே கிராமம் கிராமமாக படையெடுத்துச் சென்று இருந்த இடமே தெரியாத அளவிற்கு அழிப்பதுதான்.

ஆஸ்டிரியாவின் மலைநாடான டிர்ரலை முதலில் தாக்குவது என்று முடிவான பிறகு, முதலாம் நெப்போலியன் முபேர் என்ற தனது படைத்தளபதியின் தலைமையில் ஒரு பட்டாளத்தையே அனுப்பி வைத்தார். எந்தவித தடங்களும் இல்லாமல் முன்னேறிச் செல்லலாம் என்று நினைத்த தளபதிக்கு அங்கங்கே இடையூறு இருக்கத்தான் செய்தது. இருந்தும் பட்டாளம் அங்காங்கே வீரர்களை இழந்து முன்னேறித்தான் சென்றது.

ஸ்பின்ஜஸ் என்ற கிராமம் அடுத்த இலக்கு, இங்குதான் கேத்தரீனா லான்ஸ் என்ற இருபத்திரண்டு வயதே நிரம்பிய அழகி ஒருத்தி வாழ்ந்து கொண்டிருந்தாள். இக்கிராமத்தினர் அனைவருமே பக்திமான்கள். ஏசுவின் மீது அதிக அன்பு கொண்டவர்கள். ஏசு போதித்தபடி மறு கன்னத்தை காட்டக் கூடியவர்கள். அவர்களுக்கு அவர்கள் கிராமம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு அக்கிராமத்தில் இருந்த தேவாலயமும் முக்கியம். இருந்தும்,

பட்டாளத்தை தடுத்து நிறுத்த எந்த ஆண்மகனும் முன்வரவில்லை. அழித்தால் அழித்துவிட்டுப் போகட்டும். பின்னர் நாம் கட்டியதை நம்மால் மீட்டு உருவாக்க முடியாதா என்ன? என்ற எண்ணத்தில் வழிவிட்டு எங்கெங்கோ ஓடி ஒளிந்தனர்.

கேத்தரீனா மட்டும் அப்படி நினைக்கவில்லை. பிரெஞ்சு நாட்டினரின் மீது அவளுக்கு எந்த துவேஷமும் கிடையாது. தேய்ந்துபோன பட்டாளத்தை வரவேற்று உபசரிக்க அவள் ஆயத்தமாகத்தான் இருந்தாள். ஆனால் பட்டாளம் நட்புக் கரம் நீட்டி கிராமத்தினுள் நுழையவில்லையே. தேவாலயத்தை இடித்துத் தள்ளிவிட்டுச் செல்ல அவர்கள் தயாரான போது, வெகுண்டெழுந்தாள் கேத்தரீனா.

ஆண் பலம் இல்லாமல் எப்படி பட்டாளத்தை விரட்டி அடிப்பது? ஆண்கள் யாரும் அவள் கண்களுக்குத் தென்படவில்லை. தேவாலயம் தகர்க்கப்படுவதை அவளால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை .

எங்கிருந்துதான் அவளுக்கு அவ்வளவு தைரியம் பிறந்ததோ, அவளுக்கே தெரியவில்லை. தனக்குள்ளே ஒரு பட்டாளமே இருப்பதை உணர்ந்தாள். யாரையும் துணைக்கு அழைக்காமல் வைக்கோல் வாரிப் போடும் நீண்ட கவைக் கொம்போடு களத்தில் இறங்கிவிட்டாள்.

ஒரே ஒரு பெண். பிரெஞ்சுப் பட்டாளத்தையே அதிர வைத்தாள். வீரர்கள் நிலை குலைந்து போயினர். தளபதியே அவளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் இங்கும் அங்கும் ஓடினார். அவரால் அவளது போர்க்குணங்களை ரசிக்காமல் இருக்க முடியவில்லை. தெய்வீகம் நிரம்பிய அவளது அழகிய முகமும் அவரது வாளை சேதமடையச் செய்தது. அவள் ஒரு ஆளா



அல்லது பலபேரா என்ற சந்தேகம் அவருள் வலுத்தது.

கேத்தரீனாவின் அசாத்திய தைரியத்தை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த கிராமத்துப் பெண்களுக்கும் தைரியம் பிறந்துவிட்டது. வீட்டுக்குள் ஓடி தங்கள் கைகளில் எது கிடைத்ததோ அதை தூக்கி வந்து வீரர்களை தாக்கினர். பாம்பு போல நெளிந்து நெளிந்து சீறினர்.

பாம்பு என்றால் படையும் நடுங்குமாயிற்றே! பெண்ணிடம் அடி வாங்கும் ஆணிற்குள் கோழைத்தனமே குடிபுகும். பட்டாளம் தன் பலத்தை முழுவதுமாக இழந்ததை உணர்ந்தது. தளபதி பணிந்தார். படை பின் வாங்கிச் சென்றது. கிராமத்து ஆண்கள் ஒளிந்திருந்த இடங்களை விட்டு வெளியேறி வந்தனர். கண் சிவந்து நின்ற தங்கள் பெண்களைப் பார்ப்பதற்கே அவர்களது கண்கள் கூசின. வழக்கமாய் தலை குனிந்து நிற்கும் பெண்கள் தங்களது தளபதி கேத்தரீனாவின் பின்னால் தலை நிமிர்ந்து நின்றனர். தலை நிமிர்ந்து நிற்கும் ஆண்களோ தலை கவிழ்ந்து நின்றனர்.

எப்போதாவது வெளிப்படும் பெண் வீரத்தின் முன் எப்போதுமே வெளிப்படும் ஆண்வீரம் எம்மாத்திரம்?

அந்த மறக்க முடியா நிகழ்ச்சிக்குப் பின், கேத்தரீனா 57 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தாள். அவள் விண்ணக வாழ்வு நோக்கிச் செல்லும் வரை மக்கள் அவளை டிர்ரல் மலை நாட்டின் முடிசூடா ராணியாகவே பாவித்தனர். எல்லா புகழும் இறைவனுக்கே.



### தமிழ் விவிலிய மொழிப்பெயர்ப்பில்

# பிலிப்புஸ் பல்தேயுஸ்

### முதன்மையானவர்

முனைவர் த.ஜான்சிபால்ராஜ்

இன்றைய உலகில் எட்டு பில்லியனை (800 கோடி) தொட்டுவிட்ட மனித எண்ணிக்கையில் 220 கோடிக்கும் மேல் கிறிஸ்தவ சமயத்தினரே உலகெங்கும் பரவியிருக்கின்றனர். இது மொத்த மக்கள் தொகையில் 32 சதவீதமாகும்.

கிறிஸ்தவம் இந்த அளவிற்கு பரவி வளர்வதற்கு மூல காரணங்களுள் ஒன்று அதன் அடிப்படைக் கொள்கைகள், மனித சமூகத்தை நெறிபடுத்துவதில் முதலிடம் வகிக்கின்றன. அடுத்து கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கொள்கைகளும் சித்தாந்தங்களும் எழுத்தாக்கம் பெற்று வழிவழியாக மக்கள் பின்பற்றும் வகையில் போதிக்கப்படுகின்றது.

கிறித்தவர்களின் புனித நூலான வேதாகமம் (Bible) பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரண்டு பகுதிகளை உடையது. இயேசு கிறிஸ்துவால் உருவான கிறிஸ்தவம் அவரது பிறப்பிற்கு முன்புவரை இருந்த இறை வார்த்தைகளின் தொகுப்பு பழைய ஏற்பாடு எனவும் அவருக்குப் பிறகு அவரது போதனைகளின் அடிப்படையில் உருவானது புதிய ஏற்பாடு எனவும் வழங்கப்பட்டு வருகிறது.

கி.பி. 130 வரையில் 4 சுவிசேஷங்களும், பவுலுடைய 13 நிருபங்களும், கி.பி 170-220 வரையில் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களோடு சமநிலை அடைந்தன. கி.பி 369 ஆம் ஆண்டு வரையில் நாம் புதிய ஏற்பாடு என்று அழைக்கும் வழக்கம் கிறிஸ்தவர்களுக்குள் ஏற்பட்டது (சபாபதி குலேந்திரன், கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு).

எனவே பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சேர்ந்த முழு புத்தகமும் கிறிஸ்தவர்களின் வேதாகமம் ( Bible) என்று வழங்கப்பட்டு புனித நூலாக இருந்து வருகிறது.

பழைய ஏற்பாட்டின் பெரும்பகுதி எபிரேய மொழியிலும் சில பகுதிகள் அரமேக் என்னும் மொழியிலும் எழுதப்பட்டது. ஆனால் புதிய ஏற்பாடு முழுவது கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. கிறிஸ்தவம் பின்னர் வந்த நூற்றாண்டுகளில் உலகெங்கும் வேகமாக பரவியபோது, அந்தந்த நாடுகளின்



மொழிகளில் விவிலியமும் மொழிப் பெயர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்நிலையில் 15 ஆம் நூற்றாண்டில் அச்சுக்கலை ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் சுவடிகளிலும் தோல்சுருள்களிலும் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் அச்சேறியதோடு நிறைய மொழிகளிலும் மொழிப் பெயர்க்கப்பட்டது.

இந்தியாவிற்கு 16 ஆம் நூற்றாண்டில் வாணிபத்திற்காக வந்த ஐரோப்பியர்கள் தங்களது சமயப்பற்றையும் சேர்த்தே கொண்டு வந்தனர். அதனால் ஏற்பட்ட மாற்றங்கள் அளப்பரியது.

ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மக்களிடையே ஏற்பட்ட மனவெழுச்சி, உலகமெங்கும் சென்று சமயப்பணி செய்யுங்கள் என்ற இயேசு கிறிஸ்துவின் கட்டளையைத் துரிதமாக நிறைவேற்றும் மனநிலைக்கு கொண்டு சென்றது. இதன் எதிரொலியாக இந்தியாவிற்கும் வந்த மிஷனெரிகள் சமயப்பரப்பில் ஈடுபட்டபோது விவிலியத்தை மொழிபெயர்ப்பதை அத்தியாவசியமானதாக உணர்ந்தனர்.

இந்திய மொழிகளுள் தமிழில் தான் முதன் முதலில் விவிலியம் மொழிப்பெயர்க்கப்பட்டது. 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் மிஷனெரிகள் இந்தியாவிற்கு வந்து சமயப்பணிகளோடு பெரிய அளவில் சமுதாயப் பணிகளும் செய்திருந்தாலும் அவர்கள் விவிலிய மொழிபெயர்ப்பில் இறங்கவில்லை.

இதற்கு ரோமானியர்கள் ஆரம்ப காலகட்டத்திலேயே இறைவார்த்தைகள் தங்களது லத்தின் மொழியிலிருந்து பிற மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்படுவதை விரும்பவில்லை. அவர்கள் லத்தின் மொழி மட்டுமே தெய்வீகமானதாக கருதியதே இதன் காரணமாக கருதப்படுகிறது.

ஆனால் 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1706 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்த சீர்திருத்தப் பிரிவினரான சீகன்பால்க் என்ற மிஷனெரியின் வருகை வேதாகம மொழிப்பெயர்ப்பை தொடங்கி வைத்தது. இரண்டாண்டு காலம் தமிழைக் கற்றுத்தேர்ந்த சீகன்பால்க் 1708 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்கத் தொடங்கி 1711 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி முடித்தார். இதன் மூலம் தமிழ் மொழியில் மட்டுமல்ல இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் தமிழில் தான் விவிலியம் மொழிப் பெயர்க்கப்பட்டு அச்சேற்றப்பட்டது என்ற பெருமையை பெற்றது.

ஆனால் சீகன்பால்குக்கு முன்னரே பிலிப்புஸ் பல்தேயுஸ் என்பவரால் தமிழில் மத்தேயு சுவிசேஷம் மொழிப் பெயர்க்கப்பட்டிருக்கிறது.

16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் கடலோர மாகாணங்கள் போர்த்துக்கீசியர்களின் ஆட்சிக்குள்ளாயின. 1619 இல் யாழ்ப்பாணமும் அவர்கள் வசமாயிற்று. இம்மாகாணங்களெல்லாம் 1656-1658 இல் ஒல்லாந்தர் (Holland) ஆளுகையின் கீழ் வந்தது. யாழ்ப்பாணம் பிடிக்கப்பட்டபோது **பிலிப்புஸ் பல்தேயுஸ்** என்னும் அருட்பணியாளர் ( Reverent) இலங்கையில் சமயப்பணியாற்றி வந்தார். அவர் 1658 இல் யாழ்ப்பாணப் பிரிவுக்கு முதன்மை குருவாக (போதகராக) நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையில் இருந்தபோது விவிலியத்தை மொழிப்பெயர்க்கத் தொடங்கினார். அங்கு அவர் இருந்த கொஞ்ச காலத்தில் மத்தேயு சுவிசேஷத்தை மட்டும் தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்தார். ஆனால் 17 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் அச்சகம் இல்லாதபடியால் அவரது இந்த மொழிப்பெயர்ப்பு அச்சாக்கப்படவில்லை.

ஒல்லாந்தர் 18 ஆம் நூற்றாண்டில் அச்சு நூல்களை மதிப்பித்து வெளியிட்டபோது, 'பிலிப்புஸ் பல்தேயுஸ் என்பவரால் தமிழ்ப்படுத்தப்பட்ட மத்தேயுசுடைய சுவிசேஷத்தினாலும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது' என்று பின்வந்த விவிலியத் திருப்புதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாக விவிலிய மொழிப்பெயர்ப்பின் வரலாற்றாசிரியர் அருட்திரு சபாபதி குலேந்திரன் தனது நூலில் விளக்குகிறார் (மேலது,ப-39).

இவரது மத்தேயு சுவிசேஷ திருப்புதல் பின்னர் பலரால் திருத்தப்பட்டு 1741 ல் அச்சேறி அது கொழும்பில் வெளிவந்தது'.

1706 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்த முதல் சீர்திருத்தக் கிருத்தவப் பிரிவைச் சார்ந்த சீகன்பால்க் என்ற மிஷனெரி தமிழ்க் கற்று 1708 ஆம் ஆண்டு புதிய ஏற்பாட்டை மொழிப் பெயர்க்கத் தொடங்கி 1711 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி முடித்தார். 1714 ஆம் ஆண்டு அது அச்சில் வெளிவந்தது. (மேலது,பக்46)

அந்த வகையில் தமிழில் அச்சேறிய முதல் தமிழ் வேதாகமம் சீகன்பால்க்கின் மொழிப்பெயர்ப்பு தான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் சீகன்பால்க்கிற்கு 55 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் மத்தேயு சுவிசேஷம் பிலிப்புஸ் பல்தேயுஸ் என்பவரால் முதன்முதலில் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கிறது என்ற வரலாற்றுண்மையை தமிழ் விவிலிய மொழிப்பெயர்ப்பு வரலாற்றில் பதிக்கப்பட வேண்டும். பிலிப்புஸ் பல்தேயுசின் இம்மொழிப் பெயர்ப்பு பற்றின தகவல் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்களின் பார்வைக்கு எட்டியும் எழுத்தாக்கம் பெறாமல் தமிழ் விவிலிய மொழிப்பெயர்ப்பு வரலாற்றில் ஓர் பிழையாகவே இருந்து வருகிறது என்பதே உண்மை. இவரது இம்முதல் மொழிபெயர்ப்பு 1741 ல் கொழும்பில் அச்சேறி வெளிவந்துள்ளது. அச்சேற்றமே வரலாற்றுப் பதிவு என்ற தவறான புரிதல்கள் அகலவும் அகற்றப்படவும் வேண்டும்.

ஆதாரம்–

**கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு.**
**சபாபதி குலேந்திரன்,**
**இந்திய வேதாகமச் சங்கம்,**
**பெங்களூர்.**

தென்னிந்திய திருச்சபையின் (C.S.I) முதல்

# சகோதரி கிரேஸ் வயலட் ஆரோன்

“ஒரு பெண்ணைப் படிக்க வைத்தால் ஒரு நாடே கல்வி பெறுகிறது” என்பதுதான் அந்தப் பழமொழி. இன்றைய நாளில் ஈரோட்டில் பெண்கள் உயர்கல்வியில் சிறந்து விளங்க சகோதரி கிரேஸ் வயலட் பங்கு சிறப்பானது. இவர் 1913 ஆண்டு ஜூன் 23ம் தேதி பெங்களூரில் பிறந்தவர். ஒருங்கிணைக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டு தென்னிந்திய திருச்சபையின் (C.S.I) முதல் அருட் சகோதரியாக நியமனம் பெற்றவர்.

பின்னர் 1961 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு சென்று ஓராண்டு நீயூயார்க் ஐக்கிய இறையியல் மடத்தில் பயின்றவர். பெண்கள் மத்தியில் சிறப்பாக பணியாற்றியதால் 1968 ஆம் ஆண்டு தென்னிந்திய திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் பொது செயலாராக பொறுப்பேற்று பணியாற்றினார். அதன்பின்பு 1973 மீண்டும் கோவை திருமண்டலத்திற்கு வருகை தந்து ஈரோட்டில் மழலையர் பள்ளி தொடங்கி நடத்தி வந்தார். ஈரோட்டில் மகளிர் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்திய பெருமை இவரையே சாரும். இப்பள்ளியின் முதல் தாளாளராகவும் பணி செய்தவர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

1976 ஆம் ஆண்டு கோவைத் திருமண்டலத்திலிருந்து ஓய்வு பெற்றவர். பிறகு பெங்களூரில் உள்ள விசுராந்தி நிலையத்தின் தென்னிந்திய திருச்சபை மகளிர் இல்ல காப்பாளரானார்.

1980 நவம்பர் திங்கள் 7 ம் தேதி தனது 67 வது வயதில் காலமானார். தென்னிந்திய திருச்சபைக்கு ஒரு பெண் பணியாளர் என்ற முறையில் தொடர்ந்து 26 ஆண்டுகள் தன் முழுப்பணியையும் இயேசுவிற்காக அர்ப்பணித்தார்.

இவருடைய கல்லறையில் இப்படியாக வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

**நான் கர்த்தருடைய வீட்டிலே**
**நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.**

**ரமேஷ், ஈரோடு.**



நான் கர்த்தருடைய
வீட்டிலே
நீடித்த நாட்களாய்
நிலைத்திருப்பேன்.



தமிழ் நாட்டின்
தனிப்பெரும் நாவலாசிரியர்
அ.மாதவையா
அவர்களின்

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்

தொடர் –20

### மாதவன் ஊர் திரும்புகிறான்

இந்தக் கொலை முயற்சி நடந்து மூன்று மாதங்கள் கடந்து விட்டன. லிட்டில்டன், அமாத்யா இருவருமே அரசரிடம் புகார் கொடுத்தார்கள். விசாரணையில் அமாத்யா, கமலாபாய், அவளது வேலைக்காரி இவர்களுக்கு எதிராக எதுவும் நிரூபணம் ஆகவில்லை. கணவர் இறந்த செய்தியைக் கேட்டதும் கிளாவிருந்தா மயக்கமாகி விட்டதாகவும், மிகவும் சிரமப்பட்டு மயக்கம் தெளிவித்ததாகவும், அப்படித் தெளிந்தவுடன் அவள் தான் சதியாக உயிர்விடத் தீர்மானித்திருப்பதாகவும், ஆனால் நெருப்புக்குப் பயப்படுவதால் கடைசிவரை உறுதியுடன் இருப்பதற்காகத் தனக்கு ஏதாவது ஊக்கமூட்டும் மருந்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும், அதன்பேரில் அந்த உத்தம நோக்கம் ஈடேற ஒத்தாசையாக அவர்கள் நாட்டுச் சாராயத்தைக் கொடுத்ததாகவும், நடந்தது இவ்வளவு தான் என்றும் அவர்கள் சாதித்தார்கள். நிறைய சாட்சிகளையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். கிளாவிருந்தாவின் வாக்குமூலத்தை உறுதிப்படுத்த ஒரு சாட்சிகூட இல்லை. ஆகவே குற்றவாளிகள் தப்பிவிட்டார்கள். ஆனால் அரசர் துளசாஜி இதைச் சாக்காக வைத்துக் கொண்டு அமாத்யாவை வேலையினின்று நீக்கிவிட்டார்.

லிட்டில்டன் கிளாவிருந்தாவின் சொத்து விவரங்களை விசாரித்து அறிந்தார். துளசாஜியின் இயல்பையும், அவர் மண்டலாதிபதிக்கு வருடாந்திரக் கப்பம் கட்டுவதற்கே திணறுவதையும் உணர்ந்தார். கிளாரிந்தா உப்பூர் உரிமையை அறவே விட்டுக் கொடுத்து விடுவதாகவும், தனது சீதனச் சொத்தும், காலஞ்சென்ற தன் கணவர் கையில் இருந்து வந்ததுமான மலையூரை மாத்திரம் தனக்குத் தந்தால் போது மென்றும் அரசரிடம் மனுச் செய்யுமாறு அவளுக்கு ஆலோசனை சொன்னார்.

அமாத்யாவோ, காலஞ்சென்ற தனது தமையனாருக்கு கிளாவிருந்தா அந்தச்சொத்தை ஏற்கெனவே நிபந்தனையின்றிக் கொடுத்துவிட்டதால் தன் தமையனார் அதைத் தம் தத்துப் புத்திரனான நாராயணனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டார் என்று வழக்குப் பேசினார். மேலும், அவள் சதியாகிவிட்ட பின்பு அந்தச் சபதத்தை மீறிவிட்டதாலும், சாதிக் கட்டுப்பாடுகளை வெளிப்படையாக எதிர்த்து ஒரு மிலேச்சனோடு வாழ்ந்து வருவதாலும் ஜீவனாம்சம் பெறுவதற்கும் அவள் பாத்தியதைப்பட்டவள் அல்லள் என்றும் விவாதித்தார். ஆகவே, அரசர் அவளுடைய மனுவைச் சட்டப்படி தகுந்த விசாரணைக்குப் பிறகு தீர்ப்புச் செய்யுமாறு, பிராத்வீகருக்கு அதாவது தலைமை நீதிபதிக்கு அனுப்பி வைத்தார். கிளாவிருந்தாவின் தீக்காயங்கள் நன்றாக ஆறிவிட்டன. ஆனால் கால்களிலும் தோள்களிலும் பெரிய விகாரமான தழும்புகள் விழுந்துவிட்டன. அமாத்யாவுக்குப் பயந்ததினால், அவள் லிட்டில்டனுடைய பங்களாவின் காம்பௌண்டில் இருந்த ஒரு சிறு துணை வீட்டில் சாரதாவோடு வசித்து வந்தாள். வழக்கில் ஜெயிக்கும்வரை அவருடைய பலத்த பாதுகாப்பை விட்டு அகன்றுவிட அவள் விரும்பவில்லை. வழக்கில் ஜெயித்து சொத்துக்குப் பதிலாகப் பணம் கையில் கிடைத்துவிட்டால் அதை எடுத்துக்கொண்டு தொலைவில் உள்ள புண்ணிய தலங்களுக்குச் சென்று தன் பாட்டனாரின் அந்திம ஆசைகளை நிறைவேற்றவேண்டும் என்பதே அவள் நோக்கமாக இருந்தது.

லிட்டில்டனும் சாரதாவும் சேர்ந்து சிரத்தையுடன் செய்த பணிவிடைகளால் தீக்காயங்கள் ஆறி அவள் நடமாடத் தொடங்கியதுமே இன்னொருவருடைய செலவில் இருந்து வருகிறோமே என்ற எண்ணம் அவள் மனதை வாதித்து

வந்தது. அவள் மனக் கிடக்கையை நாசுக்காகப் புரிந்து கொண்ட லிட்டில்டன் நான் என்னுடைய சமஸ்கிருத முன்ஷிக்கு இருபது ரூபாய் சம்பளம் கொடுக்கிறேன். ஆனால் அவர் கற்றுத்தரும் முறை எனக்குத் திருப்தியாக இல்லை. நீங்கள் எனக்கு சமஸ்கிருதம் கற்றுக்கொடுக்க முடியுமா?' என்று கேட்டார். அவள் சற்றுத் தயங்கினாள். 'நீங்கள் ஒப்புக்கொண்டால் அது நீங்கள் எனக்குச் செய்யும் ஒரு பெரிய உபகாரமாக இருக்கும்' என்று அவர் மீண்டும் சொல்லவே அவள் சம்மதித்தாள்.

ஆனால் விளையாட்டாக, 'பிராமணர்கள் கல்வியை இலவசமாக அளிக்கலாமே தவிர அதை விற்கக்கூடாது. ஆனால் நீங்கள் இரண்டு தடவைகள் என் உயிரைக் காப்பாற்றியிருப்பதால் உங்கள் காரியம் வேறுதான்' என்றாள்.

ஆனால் வழக்கு ஜெயித்துப் பணம் கைக்கு வந்தவுடன், இவருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை வட்டியும் முதலுமாகக் கொடுத்துவிட வேண்டும் என்று மனதிற்குள் முடிவு செய்துகொண்டாள்.

கிளாவிருந்தா லிட்டில்டனுக்கு தினமும் இரண்டு மூன்று மணி நேரம் சமஸ்கிருதம் கற்றுக்கொடுத்து வந்தாள். இதனால் அவளுக்கும் சற்று ஆங்கிலம் அறிந்துகொள்ள ஏதுவிருந்தது. இந்த இரண்டு மூன்று மணி நேரங்களைத் தவிர மற்ற வேளைகளில் அவர்கள் சந்தித்துக்கொள்வது கிடையாது.

அமாத்யா வேண்டுமென்றே தஞ்சைச் செய்திகளை மாதவனுக்குத் தெரியப்படுத்தவில்லை. பெரிய தந்தையின் மரணம் பற்றியும், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் பற்றியும், பின் அமாத்யாவின் வேலை நீக்கம் பற்றியும் பல வதந்திகள் அவனை எட்டின. திட்டவட்டமான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை. அவனாகவே நேரில் கிளம்பி வந்துவிட்டான். எனினும் தந்தையிடமிருந்தும் கமலாபாயிடமிருந்தும் உண்மையை அவனால் அறிய முடியவில்லை.

அவன் கேள்விப்பட்டபடி உண்மையாகவே கிளாவிருந்தாபாய் புத்திசுவாதீனமில்லாமல் தான் இருக்கிறாளா என்றும் அந்த ஆங்கிலேயனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாளா என்றும் அறிந்து கொள்வதற்காகவேனும் அவளை நேரில் காண வேண்டும் என்று விரும்பினான். அவன் காதல் இன்னமும் உறுதியாகவே இருந்தது. அவள் லிட்டில்டனுடன் இருப்பது அவனுக்கு வெறுப்பைக் கொடுத்தது. அந்த ஆங்கிலேயனைச் சுட்டுப் பொசுக்கிவிட மாட்டோமா என்றும் கூடச் சில வேளைகளில் எண்ணினான். அவளைப் பார்க்கச் செல்வது அவன் தந்தைக்குப் பிடிக்காமல் இருக்கலாம் அல்லது அவளே தன்னைப் பார்க்க மறுத்துவிடலாம். அந்த ஆங்கிலேயனும் அவனைத் தடுத்துவிடலாம் என்றெல்லாம் நினைந்து தயங்கினான்.

காதல் வயப்பட்ட அவன், அந்த ஆங்கிலேயன் வெளியில் போயிருக்கும் வேளையிலாவது அவளைச் சந்தித்துவிடுவது என்று தீர்மானித்து ஒரு நாளையும் குறித்துவைத்தான். அந்த நாளும் வந்தது. ஆனால் அந்த நாளில் பார்த்து அவனுடைய மனைவி கிணற்றில் தவறி விழுந்து மூழ்கி இறந்துவிட்டாள்.

அவளோடு அவன் பழகியதே இல்லையாகையால் அவன் ஒன்றும் துக்கம் அடையவில்லை. ஆனால் இறுதிச் சடங்குகளைச் செய்து முடிப்பதில் இரண்டு வாரகாலம் கழிந்து விட்டது. கிளாவிருந்தாவைச் சந்திப்பதில் காலதாமதம் ஆகியதில் தான் மாதவனுக்கு அளவற்ற வருத்தம். தன் இளம் மனைவி இறந்ததைப்பற்றி அவன் கலைப்படவேயில்லை. ஆனால் இந்த மரணத்தினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தவர் அமாத்யா தான்.

அவருக்கு ஆறு ஆண் பிள்ளைகள் இருந்தனர். தமது தந்தை இறந்தபோது குடும்பச் சொத்தை தானும் தம் தமையனாரும் பிரித்துக்கொண்டதுபோல இந்த அறு வரும் பிரித்துக் கொண்டால் குடும்பப் பெயரும் மதிப்பும் குறைந்துவிடுமே என்று கவலைப்பட்டார். அதனால் தான் சரியும் தவறுமான வழிகளில் சொத்தை அதிகரிக்க பல முயற்சிகள் செய்து வந்தார். கிளாவிருந்தாபாயிக்கு ஆங்கிலேயரின் ஆதரவு இருந்ததால், வழக்கில் அவளை ஜெயித்துவிட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை. ஆனால் செல்வந்த மருமகளிடமிருந்து குறைந்தது ஒரு இலட்சம் ரூபாயாவது சீதனமாக எதிர் பார்த்திருந்தார். அந்த நம்பிக்கையில் இப்படி எதிர்பாராமல் மண் விழுந்ததால் மிகுந்த ஏமாற்றமடைந்தார். செல்வாக்கும் வருவாயும்மிக்க பதவியும் போய்விட்டது. மாதவனையும் பதவியிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று அரண்மனையில் எதிரிகள் சூழ்ச்சி செய்து வருவதாகவும் கேள்விப்பட்டார். தமது பழம் பெரும் குடியின் புகழும் செல்வாக்கும் தேய்ந்து மறைவதைக் கண்டு மனம் புழுங்கினார். வீழ்ச்சிக்குத் தாமே முக்கிய காரணம் என்று நினைத்து மனம் நொந்தார். அவரது தமையனாரோ லட்சாதிபதியை மணந்தும் தம்பியின் மகனைத் தத்து எடுத்தும் குடும்பத்தின் பெயரைப் பொன்னெழுத்துக்களில் மின்னும்படி செய்திருந்தார். ஆனால் இவரோ -?

அமாத்யாவின் அகராதியில் தகுதி என்றால் செல்வம் என்று பொருள். புகழும் அதிகாரமும் பதவியும் தேவர்களுக்குச் சமானம். பணத்தால் கூடாதது என்ன இருக்கிறது? கமலாபாயோடு சேர்ந்து செய்த பயங்கரக் கொலைக்குரிய தண்டனையிலிருந்து அவரைத் தப்புவித்ததும் பணம்தானே? பணத்திலிருந்தே அதிகாரமும், புகழும் பிறக்கின்றன. பணமுடையவனிடம் இரண்டும் இருந்தால் அவை ஒரு தனி மகத்துவத்தையும் அந்தஸ்தையும் பெறுகின்றன. அமாத்யா பணம் பண்ணுவது ஒன்றையே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகவும், பணத்தை மட்டுமே சகலத்தையும் அளக்கும் அளவுகோலாகவும் கொண்டிருந்தார்.

ஆகவேதான், ஒன்றன்பின் ஒன்றாக பணப் பிரச்சினைகள் வந்து குவியவும், அவற்றை நிவிர்த்தி செய்யும் வழிகள் புலப்படாமல் அயர்ந்து போயிருந்தார். மலையூர் வழக்கில் அரசர் நேர்முக அக்கறை காட்டியது அவருக்குக்

கலக்கமூட்டியது. அரசர்க்கு அவர்மீது இப்பொழுது நம்பிக்கை இல்லை. பிரதம நீதிபதியோ பணத்தின் மதிப்பு அறியாதவர். நடைமுறைக்கு ஒவ்வாத விஷயங்களைப் பேசுவதில் சமர்த்தர். அதனால் அவரைத் தம் வயப்படுத்த இயலாது. ஆகவே மலையூர் கிடைப்பது சாத்தியமில்லை. அவர் சொத்து முழுவதும் சேர்த்தால் எத்தனை பெறுமோ அத்தனை பெறுமானமுள்ளது மலையூர். இதுவரை தன் சொந்தமென பாவித்து அநுபவித்து வந்துவிட்ட ஒன்றை இழப்பதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதைப் பறிகொடுத்துவிடாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்ற யோசனையில் மூளையைக் குடைந்துகொண்டிருந்தார்.

முடிவில் முன்னால் ஒருமுறை யோசித்து ஆனால் வேண்டாம் என்று உதறிய திட்டத்தையே மீண்டும் தஞ்சம் அடைந்தார். அதுவும் கண்ணியமானது தான் என்று தம் மனதையே சமாதானப்படுத்தி வைத்துக்கொண்டு உப தளகர்த்தனாகிய கமலாபாயின் உதவியைத் தேடிக்கொண்டு வந்தார்.

கமலாபாய் இப்பொழுது கல்யாணியை மாத்திரம் வேலைக்கு வைத்துக்கொண்டு இன்னும் திவானின் வீட்டிலேயே வசித்து வந்தாள். சோனாபாய் அவளைத் தன் வீட்டில் ஏற்றுக் கொள்ளவில்லை. அமாத்யா ஏதாவது ஒரு சாக்கைச் சொல்லிக் கொண்டு அவள் பணத்தில் இன்னும் ஒரு செப்புக் காசைக் கூட அவளிடம் கொடுக்கவில்லை. ஆகவே அவள் இன்னும் அவர் பிடியிலேயே இருந்து வந்தாள் எனலாம். கமலாபாயிடம் தன் திட்டத்தை அலசிவிட்டு வீடு திரும்பியதும் மாதவனைக் கூப்பிட்டு குடும்ப சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி கமலாபாய் அவனுடன் பேசுவாள் என்று சொல்லி அவனை அவளிடம் அனுப்பிவைத்தார்.

அந்தச் சதிகாரி அவளிடம் நைச்சியமாகச் சொல்லியது: அவன் சென்று கிளாவிருந்தாவைக் கண்டு பேசி வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்து வரவேண்டியது. பின் அவளை ஆசைநாயகியாகக் கொண்டு இருவரும் சம்பிரமமாக வாழ வேண்டியது. எத்தகைய இன்பம் அவனுக்காகக் காத்திருக்கிறது என்பதைத் தேனொழுக வர்ணித்தாள். சரிந்துகொண்டிருக்கும் செல்வநிலையைத் தூக்கி நிறுத்த அது ஒன்றுதான் வழி என்றும் சுட்டிக் காட்டினாள். என்ன இருந்தாலும் பட்டுக்கோட்டை உத்தியோகம் பரதேசவாசம்தானே. தந்தையின் உத்தரவுடன் அதை இராஜினாமாச் செய்து கொள்ளலாம் என்றாள். கிளாவிருந்தா அவனையே நினைத்து உருகிக்கொண்டிருந்து, அவனோடு வாழ வாய்ப்புக் கிடைக்கலாம் என்ற ஆசையினால் தான் சதியாகாமல் மனம் மாறி விட்டாள் என்று சொல்லி அவன் காதலைத் தூண்டி விட்டாள். எல்லாவற்றையும்விட அவள் அழுத்திச் சொன்னது இதுதான். கிளாவிருந்தா வெள்ளைக்காரனோடு தங்கியிருப்பதால் ஊரில் அவதூறு கிளம்பியிருக்கிறது. அது வெகு விரைவில் நாடு முழுவதும் பரவி விடும். இருப்பவரின் கௌரவத்துக்கும் இறந்தவரின் நினைவுக்கும் பங்கம் விளைவித்து குடும்பப் புகழை அநியாயமாக சாக்கடையில் தள்ளி விட்டுவிடும். அதைத் தடுப்பதற்கும் அது ஒன்று தான் வழி என்றாள்.

மாதவராவ் அவள் பேச்சைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் கலந்தவனாய் உணர்ச்சிவயப்பட்டு நின்றான். தந்தையின் சம்மதத்தோடு இப்படி ஒரு திட்டம் உருவாகி வருவதை அவனால் நம்பவே முடியவில்லை.

குடும்ப கௌரவத்தையும் செல்வத்தையும் பாதுகாப்பதற்காக இதைச் செய்வது தான் நல்லது என்று அவனும் ஒப்புக்கொண்டான். கிளாவிருந்தாவிடம் நயமாகப் பேசி அவளை வழிக்குக் கொண்டுவருவதற்கான வழிவகைகளை விளக்கமாகச் சொல்லிக்கொடுத்தாள் கமலாபாய். தன் எதிரியும் தன்னைப்போலவே ஒரு கண்ணியக் குறைவான வாழ்க்கைக்கு இறங்கி வரப்போகிறாள் என்பதை நினைத்து கமலாபாய் மனம் பூரித்துப் போனாள்.

## காதலர் சந்திப்பு

அன்று மாலை கடைத்தெருவிலிருந்து திரும்பிவந்த சாரதா, 'பாயீமா, சங்கதி தெரியுமா? உன் மகன் ராகவனின் பெஞ்சாதி இன்னிக்குக் காத்தாலே கிணத்திலே தவறி விழுந்து செத்துப்போனாளாம்' என்றாள். கிளாவிருந்தா திடுக்கிட்டு, 'அப்படியா, ஐயோ பாவம்' என்றாள். 'சனமெல்லாம் என்ன பேசுது தெரியுமா? ஒன் சீதனத்துக்கு ஆசைப்பட்டு ஒன்னைக் கொல்லப்பார்த்தாரே, இப்ப அவர் மருமகள் செத்து, தெய்வமே அவா சீதனமும் வர வொட்டாமப் பண்ணிட்டதுன்னு பேசுது' என்றாள்.

திடீரென்று வந்த துர்ச் செய்தியால் அதிர்ச்சியுற்ற கிளாவிருந்தா, 'பாவம், நாம் அப்படியெல்லாம் சொல்லக கூடாது. இந்த மரணம் அவரைவிட அவள் பெற்றோரைத் தான் ரொம்பவும் பாதிக்கும். அவர்களுக்கு அவள் ஒரே பெண். எவ்வளவு அன்புடன் இருந்திருப்பார்கள்? அவள் புருஷனுக்கும் பெரிய அதிர்ச்சியாக இருக்கும். பாவம் சுந்தரி. அமைதியான பெண், எளிய சுபாவம் உள்ளவள். இது விபத்து என்பது நிச்சயம்தானா?' என்று கேட்டாள் கிளாவிருந்தா.

'அப்படித்தான் பேசிக்கிடுதா, வீட்டுக் கொல்லைப்புறத்திலே இருக்கே அந்தக் கெணத்துலே தண்ணி இழுத்துக்கிட்டு இருந்தாளாம். அப்படியே தவறி விழுந்துட்டாளாம். குடம் பாதி ரொம்பினாப்பல இருக்காம். பக்கத்திலே ஆருமே இல்லையாம். குணசீலரான அவ மாமனார் மாதிரியோ, கமலாபாய் மாதிரியோ ஆரும் அவங்க வீட்டிலே இல்லியே, அதுனாலே விபத்தாகத்தான் இருக்கணும்."

'கேட்கிறதுக்கே பரிதாபமா இருக்கிறதே. கணவன்மேலே உயிரையே வைத்து புக்ககத்துக்கு எப்போ வரலாம்னு காத்துக்கொண்டிருந்தாள். பட்டுக்கோட்டையிலே செய்தியைக் கேட்டதும் அவனுக்கு எப்படி இருந்திருக்கும்?'

'அவன் வந்துட்டான். அவன் இப்போ இங்கேதான் இருக்கான். நம்ப பங்களா காம்பவுண்டுச் சுவரையும் ரெண்டு மூணு தடவை சுத்திச் சுத்தி வந்து நோட்டம் விட்டானே. நீ

வீணாகப் பயப்படப்போறன்னுட்டு ஓங்கிட்ட நான் சொல்லல. அவனுக்கென்ன கவலை? நம்ம அழகுக்கேத்த பெஞ்சாதியா அவள் அப்படின்னு நெனச்சிக்கிட்டிருப்பான், மொறை எப்படி இருந்தா என்ன? அழகான பொண்ணாயிருந்தாப் போறுமே அவனுக்கு! பொம்பளையைச் சுத்துற பயல். பட்டுக்கோட்டையிலே கூட ஒரு தாசியை வச்சுக் கிட்டிருக்கான்னு பேச்சு வந்துச்சி. பெண்சாதி போனது நல்லதாப் போச்சின்னுட்டு, அவன் மனசுக்குப் பிடிச்சாப்பிலே வேறே பொண்ணைக் கட்டிக்கிடுவான். கெழவருதான் மனசு கஷ்டப்படுவாரு. அவளைப்போல சீதனம் கொணறதுக்கு இந்தத் தஞ்சாவூர்லே வேற ஆரு இருக்கா?' என்றாள்.

செய்தியைக் கேட்டதிலிருந்து அதை ஒட்டியே கிளாவிருந்தாவின் சிந்தனை சென்றது. மாதவராவ் சம்பந்தமான தன் உணர்ச்சிகளை சாரதாவிடம்கூடச் சொன்னதில்லை. அன்று மாதவன் தட்டிக்கு அப்பால் நின்று சாரதாவுடன் பேசிக்கொண்டிருந்தபோது, விஷயத்துக்கு வருவதற்கு முன்பே அமாத்யா வந்துவிட்டார். அதனால் அவர்கள் இருவரும் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த உணர்ச்சிகளைப் பற்றி சாரதாவுக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே அவள் மாதவன் கொட்டை என்று ஒரு ஸ்திரிலோலன் என்றும், தன் எஜமானியையும் அவன் தனக்கு இரையாக்க முயற்சித்து அகப்பட்டுக்கொண்டதால்தான் அவள் தீராத சந்தேகத்துக்கும் அதைத் தொடர்ந்து பல அவதிகளுக்கும் ஆளாக நேர்ந்தது என்பது அவள் கருத்து.

கிளாவிருந்தாவின் மனத்தின் ஒரு பாகத்தில் மாதவனுக்கு இன்னும் இடம் இருந்து வந்தது. ஆனால் முன்னைப்போல தீவிரமாக இல்லை. ஏனென்றால் அவள் உடல் மட்டும் அல்ல, அவள் அறிவும் மனமும் அக்கினிப்பிரவேசம் ஆகியிருந்தது. சமஸ்கிருதப் படிப்புக்காக லிட்டில்டனோடு செலவிட்ட நேரத்தில், ஒரு பகுதி நேரத்தில் அவர்கள் இருவரும் கனமான ஆழ்ந்த விஷயங்களைப்பற்றி ஆத்மார்த்தமாகப் பேசினார்கள். மண வாழ்க்கையின்போது உறங்கிக்கிடந்த அறிவு வாழ்க்கையை அந்த உரையாடல்கள் தூண்டி எழுப்பி விட்டன. சில வாரங்களுக்குள்ளாகவே பண்பட்ட அவள் அறிவு எல்லாப் பக்கங்களிலும் விரிவடைந்து, அவள் வாழ்க்கையை இப்பொழுது ஒரு விசாலமான உயர்ந்த நோக்குடன் கண்டாள்.

கணவன் வீட்டில் கமலாபாய் அமாத்யா முதலியோர் சேர்ந்து அவளுக்கு இழைத்த அநீதி, தீங்கு எல்லாவற்றுக்கும், அவர்களுடைய பேராசை, சுயநலம் இவற்றையும்விட, அறியாமை, மூடநம்பிக்கை, உளுத்துப்போன சாதிக் கட்டுப்பாடுகளே பெரும்பாலும் காரணமாகும் என்று லிட்டில்டன் அவளுக்குச் சுட்டிக்காட்டியிருந்தார். மனிதன் கருணையின்மையால் ஆயிரமாயிரம் மனிதர்களை சோகத்தில் ஆழ்த்துகிறான் என்பது அவருக்குப் பிடித்த ஒரு கருத்து. வாழ்க்கையின் பொறுப்புகளைச் சரிவரப் புரிந்துகொள்ளாததினாலோ அல்லது குறுகிய நோக்குடன் புரிந்துகொள்வதாலோதான் இவ்வாறு கருணையற்ற நிலைமை உண்டாகிறது என்றும் சொல்லுவார்.

அவர் சொன்னபடியே தன்னைச் சுற்றிலும் மூடநம்பிக்கைகளும் அறியாமையும் வேரூன்றி வளர்ந்திருப்பதை உணர்ந்தாள், கிளாவிருந்தா. தகுந்த துணை மாத்திரம் ஒன்று கிடைத்தால், கோணலானதைச் செவ்வையாக்கி, உலகத்தில் தான் வாழும் சிறிய மூலையையாவது இன்னும் சற்றுப் பிரகாச முள்ளதாகவும் மகிழ்ச்சியுடையதாகவும் ஆக்குவதில் தன் எஞ்சிய நாட்களைச் செலவிடலாமே என்று மிகுந்த ஆர்வம் கொண்டாள்.

அவள் காதலிக்கும் மாதவராவ் அப்படிப்பட்ட தகுந்த துணை ஆவானா? அவள் மனதில் இருப்பதைப் போன்ற உன்னத இலட்சியங்கள் அவனுக்கு இப்பொழுது இல்லையாயினும், தன்னைக் காதலிப்பதால் தன் ஆர்வத்தில் அவனும் பங்குகொள்ளுமாறு செய்யலாம். ஆனால் அவன் அவளை இன்னும் காதலிக்கிறானா? இல்லாவிட்டால் ஏன் காம்பௌண்டைச் சுற்றிச் சுற்றி நோட்டமிட்டான்? அப்படியானால் ஏன் அவளை இன்னும் வந்து பார்க்கவில்லை? அவளை விகாரப்படுத்தியுள்ள தழும்புகளைப் பார்த்தால் அவன் என்ன நினைப்பான்? கால்களில் இருந்த தழும்புகளை கரண்டைவரை வந்த சேலை மறைத்தது. தோள்களிலிருந்தவறறை முன்னங்கைகளில் இருந்த கோணல்மானலான தழும்பு ஒன்றையும் மறைக்க நீளக்கை வைத்த சட்டை அணிந்திருந்தாள். ஆனால் அவனை ஏமாற்ற அவள் விரும்பவில்லை.

அந்தத் தாசியைப்பற்றி அவள் கேள்விப்பட்டது உண்மையாக இருக்குமா? அவனுக்கு இசை என்றால் பைத்தியம் என்பதை அவள் அறிவாள். அதற்காக வேசியுடன் உறவு வைக்கவேண்டுமா?

இப்பொழுது அவள் விதவை. அவன் தாரம் இழந்தவன். சுந்தரியின் திடீர் மரணம் தெய்வாதீனமாக தக்க வேளையில் நடந்திருக்கிறதோ என்றும் நினைத்துக்கொண்டாள். பின் அப்படி நினைத்ததற்காக வெட்கப்பட்டாள்.

அவன் அவளைக் கல்யாணம் செய்வதற்கு சம்மதிப்பானோ? பாமண விதவைகள் மறுமணம் செய்து கொள்ள சாஸ்திர விதிப்படி இடமுண்டு என்றும், பழங்காலத்தில் அப்படி நடந்து வந்தது என்றும், வரவர அவ்வழக்கம் பழக்கத்தில் இலாமல் மறைந்துவிட்டது என்றும் பாபாஜி சொல்லி அவள் கேட்டதுண்டு. இவள் பொருட்டு சமுதாயத்தை எதிர்க்க அவனுக்குத் துணிவு இருக்குமா? விதவா விவாகத்தை சமுதாயம் ஒப்புக்கொண்டாலும், பெரியப்பாவின் மனைவியாக இருந்தவளை மணந்து கொள்ள அது சம்மதம் அளிக்குமா என்பதை அவள் நினைத்துப்பார்க்கவில்லை. அவள் தன்னுடைய கலியாணத்தைத் திருமணம் என்று ஒரு நாளும் ஒப்புக்கொண்டதே இல்லையாதலாலும், பலவந்தமாக தன்னை அடிமைப்படுத்தி தனக்கு இழைத்தத் தீங்கு என்று அதைக் கருதியதாலும்தான் அவள் அந்தக் கோணத்தை நினைத்துப் பார்க்கவில்லை.

**தொடரும் ...**

# மிஷனரிகளின் தியாகத்துடன் கூடிய அர்ப்பணிப்பு

# இன்றைய தலைமுறைக்கு ஓர் முன்மாதிரி

**ஜா.ஜான் ஞானராஜ்,**
**கல்லிடைக்குறிச்சி**

**கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிகளின் அர்ப்பணிப்பு**

**பிரான்சிஸ்கன் சபை**

இந்தியாவிற்கு வருவதற்கான கடல் வழி போர்த்துகீசிய மாலுமி வாஸ்கோடகாமாவால் 1498 இல் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் மூலம் வலிமையான கடற்படையைக் கொண்டிருந்த போர்த்துக்கீசியர் இந்தியாவிலும் இந்திய பெருங்கடல் பகுதிகளிலும் இடங்களைக் கைப்பற்றி தமது காலனியாதிக்கத்தை நிறுவினர். இந்தியா உட்பட அந்த காலனியாதிக்க நாடுகளில் கிறிஸ்தவத்தை அறிவிக்க பிரான்சிஸ்கன் சபை துறவற மிஷனரிகள் புறப்பட்டு சென்றார்கள்.

பிரான்சிஸ்கன் துறவற சபை 1209 இல் தூய.அசிசி பட்டணத்து பிரான்சிஸ் அவர்களால் தொடங்கப்பட்டது. கோவாவில் போர்த்துக்கீசிய காலனியாதிக்கம் ஏற்பட்ட உடன் கோவாவிற்கு நற்செய்தி அறிவிக்க இவர்களே முதலில் வருகை தந்தார்கள். இவர்களால் கோவா மிஷன் நிறுவப்பட்டது. கோவாவில் இருந்து இன்றைய கேரளா மற்றும் தமிழ்நாடு வரை இவர்கள் நற்செய்தி பணியை சிறப்பாகச் செய்தார்கள்

**இயேசு சபை**

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1517 இல் ஒன்றுபட்ட கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் பிளவு ஏற்பட்டது. புராட்டஸ்டண்ட் எனும் சீர்திருத்த கிறிஸ்தவம் கத்தோலிக்க போதகர் மார்ட்டின் லூதர் மூலம் உருவானது. இது உலகமெங்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என கத்தோலிக்க கிறிஸ்தவ சபையை தட்டியெழுப்பியது. மேலும் கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் இயேசு சபை எனும் துறவற மிஷனரி சபை உருவாகவும், இது காரணமாக அமைந்தது. பாரிஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த இக்னேசியஸ் லயோலா மற்றும் பிரான்சிஸ் சேவியர் உட்பட 7 பேர் கொண்ட குழு மூலம் 1534 முதல் இயேசு சபை எனும் துறவற சபை உருவாகத் தொடங்கி இருந்தது. 1540 இல் போப்பாண்டவர் மூன்றாம் பவுல் அவர்களால் இச்சபை அங்கீகரிக்கப்பட்டது. இயேசு சபை மிஷனரிகள் நற்செய்தி அறிவிக்க உலகமெங்கும் புறப்பட்டு சென்றார்கள்.

**ஆபத்தான கடல் பயணத்தை தமது தியாகம் மிக்க அர்ப்பணிப்பால் கடந்த மிஷனரிகள்**

பிரான்சிஸ்கன் சபை மற்றும் இயேசு சபை மிஷனரிகள் கொச்சி மற்றும் கோவாவைத் தலைமையிடங்களாகக் கொண்டு நற்செய்தி பணியைச் செய்யத் தொடங்கினர். பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த இரு துறவற சபை மிஷனரிகளும் ஐரோப்பாவில் இருந்து இந்தியா வருவதற்கு 12 மாதம் முதல் 14 மாதங்கள் வரை ஆபத்தான கடல் பயணத்தை இவர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. கப்பல் செல்ல வேண்டிய திசை நோக்கி வீசும் கடல் காற்றை சார்ந்தே அக்காலத்தில் கப்பல்கள் சென்றுவந்தது.

அவ்வாறு கடல் காற்று வீசாவிட்டால் பல நாட்கள், பல வாரங்கள் என கப்பலை



நடுக்கடலில் அல்லது அப்பகுதியில் உள்ள தீவின் கடற்கரையில் நிறுத்தி வைக்க வேண்டும். இவ்வாறு நிறுத்தி வைக்கப்படுகிற வேளைகளில் கடல் நோய்கள் கடல் பயணிகளிடம் பரவ ஆரம்பித்தது. கடல் தட்பவெப்பநிலை பாதிப்பு காரணமாக கப்பலில் உணவுப் பொருட்கள் அடிக்கடி கெட்டுப்போகும் சூழ்நிலை இருந்தது. பாதிக்கு மேற்பட்ட பயணிகள் கடல் தட்பவெப்பநிலை ஒத்துக் கொள்ளாத நிலையில் கடல் பயணத்திலேயே மரணத்தை தழுவினர்.

இந்தியா நோக்கிய கடல் பயணத்தில் கப்பல் ஆப்பிரிக்காவைச் சுற்றி வந்ததால் இரு முறை கப்பல் நிலநடுக்கோட்டைக் கடக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அந்நேரம் பெரும் துன்பங்களை கடல் பயணத்தில் பயணிகள் சந்தித்தனர்.

இந்தியாவிற்கு நற்செய்திப் பணி செய்ய 1542 இல் கோவாவிற்கு வந்து சேர்ந்த இயேசு சபை மிஷனரி தூய.சவேரியார் 07.04.1541 இல் இந்தியா செல்ல போர்த்துக்கல் தலைநகரான லிஸ்பனில் கப்பல் ஏறினார். 06.05.1542 இல் கோவாவில் தரை இறங்கினார். இந்த 13 மாத தூய சவேரியாரின் கடல்பயண குறிப்புகள் மூலம் அக்கால ஆபத்தான கடல் பயணம் குறித்து நாம் அறிந்து கொள்கிறோம். அக்கால மிஷனரிகள் இந்த ஆபத்தான கடல் பயணத்தை தமது அர்ப்பணிப்பு மூலமாகவே எதிர்கொண்டு இந்தியா வந்தனர்.

### தட்பவெப்பநிலை, மருத்துவ வசதி குறைவு மற்றும் உணவு சார்ந்த காரியங்களில் மிஷனரிகளின் அர்ப்பணிப்பு

ஐரோப்பிய தட்பவெப்பநிலை குளிர்ச்சியான தன்மை கொண்டது. இந்திய தட்டவெப்பநிலை வெப்பத்தன்மை மிகுந்தது. இப்படிப்பட்ட தட்பவெப்பநிலை மாறுபாடுகள், போதுமான மருத்துவ வசதி, இல்லாமை மற்றும் உணவுப்பழக்க மாறுபாடுகள் இந்தியாவில் நற்செய்தி பணி செய்த ஐரோப்பிய மிஷனரிகளைப் பெரிதும் பாதித்தது உடல் ரீதியாக பல நோய்களை அவர்கள் எதிர்கொண்டனர். அநேக மிஷனரிகள் இளவயதிலேயே மரணமடைந்தனர்.

தூய.சவேரியா (07.04.1506 - 03.12.1552) தமது 46 ஆம் வயதிலேயே தமது இன்னுயிரை இழந்தார்.

கடின உழைப்பு மற்றும் தூக்கமின்மை சார்ந்த அர்ப்பணிப்பு தூய.சவேரியார், தந்தை. இராபர்ட் டி பொபிலி, தூய.அருளானந்தர் (ஜான் டி பிரிட்டோ) உட்பட தொடக்க கால கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிகளின் நாட்குறிப்பு, வாழ்க்கை குறிப்பு இவற்றை உற்றுநோக்குகையில் ஊழியத்தில் தூக்கமின்றி அவர்கள் கொடுத்த கடின உழைப்பைக் காணமுடிகிறது.

இயேசு சபை நிறுவனர்களும் அதன் துறவற மிஷனரிகளும் உயர்ந்த கல்வியைக் கற்றிருந்த கல்வியாளர்களாக இருந்தனர். அனைத்தையும் தியாகம் செய்து அயல்நாடுகளுக்கு மிஷனரிகளாக இருந்தனர். அவை இன்றைய தலைமுறைக்கு முன்மாதிரியாகும்.

### சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகளின் அர்ப்பணிப்பு

நற்செய்திப் பணியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த டென்மார்க் பேரரசர் நான்காம் பிரெட்ரிக் தமது டேனிஷ் காலனியாதிக்க நாடுகளில் நற்செய்தியை பரப்ப குறிப்பாக இந்தியாவில் தரங்கம்பாடிக்கு மிஷனரிகளை அனுப்ப முயற்சி எடுக்க டென்மார்க் பேராயரிடம் கேட்டுக்கொண்டார். டென்மார்க் நாட்டில் மிஷனரிகள் கிடைக்காததால் மிஷனரிப் பணிக்கு அர்ப்பணித்திருந்த ஜெர்மனி நாட்டின் வேதாகம கல்லூரியில் இறையியல் கல்வி கற்றிருந்த பர்தொலோமேயு சீகன்பால்க் மற்றும் புளுச்சோ ஆகிய இரு ஜெர்மானிய இளைஞர்களை மிஷனரி ஊழியத்திற்கு அனுப்ப டென்மார்க் பேரரசரிடம் அறிமுகப்படுத்தினார். இருவரின் அர்ப்பணிப்பைக் கண்ட பேரரசர் இருவரையும் அரசவை மிஷனரிகள் (Royal Missionaries) என்ற உயர் தகுதி கடிதத்துடன் தரங்கம்பாடிக்கு அனுப்பி வைத்தார்.

### ஆபத்தான கடல் பயணத்தை அர்ப்பணிப்புடன் கடந்து இந்தியா வந்த இரு மிஷனரிகள்

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டென்மார்க்கிலிருந்து கடல் மார்க்கமாக புறப்பட்டு ஆபத்தான கடல் பயணத்தை கடந்து இருவரும் இந்தியா வந்தடைந்தனர். 18 ஆம் நூற்றாண்டின் கடல் பயணமும் 16 ஆம் நூற்றாண்டின் கடல் பயணம் போன்று ஆபத்து மிக்கதாகவே இருந்தது. ஐரோப்பாவில் இருந்து இந்தியா வருவதற்கான பயணகாலம் 6 மாதம் முதல் 8 மாதங்களாக இருந்தது. கப்பல் இருமுறை நிலநடுக்கோட்டைக் கடந்து செல்கையில் கப்பலில் உணவுப் பொருட்கள் கெட்டுப்போயின.

சீகன்பால்க் மற்றும் புளுச்சோ ஆகிய இரு ஜெர்மானிய சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகள் டென்மார்க் தலைநகர் கோபர்கேகன் வந்து 29.11.1705 இல் கப்பல் ஏறினர். 30.11.1705 இல் இருவரும் ஏறியிருந்த 'சோபியா ஹெட்விக்கா' கப்பல் புறப்படத் தொடங்கியது. ஆபத்து மிகுந்த அக்கால கப்பல் பயணத்தில் பயணிகளில் நான்கில் ஒருவர் கடல் பயணத்தில் மரணமடைந்தனர்.

கப்பல் தரங்கம்பாடி கரையை அடையும் முன் இலங்கைப் பகுதியை நெருங்கிய போது கடும் புயல் காற்றினால் பாதிப்புக்குள்ளானது. கப்பலில் உள்ள அனைவரும் மரணத்தை தழுவும் சூழ்நிலை ஏற்பட்டது ஆனாலும் ஆண்டவர் கப்பலில் உள்ளவர்களை பாதுகாத்தார். 09.07.1706 இல் தரங்கம்பாடி கடற்கரை கப்பல் சென்றடைந்தது. 7 மாதம் 10 நாட்கள் கொண்ட இந்த கடல் பயணத்தை சீகன்பால்க் **'மரணத்தின் போதனைக்கூடம்'** எனக் குறிப்பிடுகிறார்.

### கப்பல் கேப்டன் மோசமாக நடத்தியபோதும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய மிஷனரிகள்

போர்த்துகீசிய மற்றும் ஸ்பானிஷ் கப்பல்களில் கத்தோலிக்க துறவற சபை மிஷனரிகள் மிகுந்த மரியாதையோடு கண்ணியமாக நடத்தப்பட்டது போன்று டேனிஷ் கப்பல்களில் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகள் நடத்தப்படவில்லை. அரசவை மிஷனரிகள் எனும் உயர் அந்தஸ்துடன் இருவரும் டேனிஷ் பேரரசரால் அனுப்பப்பட்ட

போதும் டேனிஷ் கப்பல் கேப்டன் இருவரையும் மிக மோசமாகவே நடத்தினார். கப்பலில் பயணம் செய்த பெண் ஒருவருக்கு கப்பல் கேப்டன் பாலியல் தொந்தரவு கொடுத்தபோது அதை சீகன்பால்கு தட்டி கேட்டதால் கப்பல் கேப்டன் அவரிடம் மோசமாக நடந்து கொண்டார். தரங்கம்பாடி கடற்கரைக்கருகில் கப்பல் சென்றடைந்ததும் கப்பலில் இருந்து தரங்கம்பாடி செல்ல படகை ஒழுங்கு செய்யவில்லை. அவர்களிருவரையும் ஏற்றிச் செல்ல வந்த படகையும் கப்பல் கேப்டன் திருப்பி அனுப்பி விட்டார். இரு மிஷனரிகளும் அர்ப்பணிப்புடன் அதைத் தாங்கிக் கொண்டனர்.

### விதவைக்கு நியாயம் வேண்டியதால் கிடைத்த சிறைவாசம்

தரங்கம்பாடியில் வாழ்ந்த டென்மார்க் நாட்டு அதிகாரிகள் ஏராளமான அட்டூழியங்களை செய்தவர்களாக அநீதியான தீர்ப்புகளை கொடுத்தவர்களாக காணப்பட்டனர். மேலும் திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவர்களை பல இடங்களுக்கு விற்பனை செய்து திருமுழுக்கு பெற்றோர்கள் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சியிலும் டென்மார்க் அதிகாரிகள் ஈடுபட்டனர். இரு மிஷனரிகளும் செய்த நற்செய்தி பணிகளைத் தடை செய்து வந்தனர். அவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சீகன்பால்க் குரல் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. நியாயம் வேண்டி ஒரு ஏழை விதவை பலரிடம் முறையிட்டும் பலன் கிடைக்காததால் சீகன்பால்குவிடம் முறையிட்டார். தனக்காக அதிகாரிகளிடம் குரல் கொடுக்கும்படி சீகன்பால்குவிடம் வேண்டி நின்றார். அவர்களுக்காக சீகன்பால்க் அதிகாரியிடம் பேசிய பொழுது அந்த அதிகாரி சீகன்பால்குவை அடிக்க வந்துவிட்டார். அதிகாரிகளிடம் முறையிட்டு பயன் இல்லை என்பதைக் கண்ட சீகன்பால்க் டேனிஷ் ஆளுநரிடம் முறையிட்டார். ஆளுநரோ விதவைக்கு நீதி வழங்காமல் விதவைக்காக தன்னிடம் முறையிட்ட சீகன்பால்குவை கோட்டையின் அடிப்பகுதியில் இருந்த கொடுஞ்சிறையில் அடைத்தார். சிறையை ஒட்டி சமையல் அறை இருந்ததால் அந்த சிறையில் பல மாதங்கள் கடும் துன்பங்களை சீகன்பால்க் அனுபவிக்க வேண்டி இருந்தது.

### குடும்ப பொறுப்புகளில் மத்தியில் அர்ப்பணிப்போடு தமிழ்நாட்டிற்கு வந்த மிஷனரி இரேனியஸ்

சிறு வயதிலேயே தந்தையை இழந்த ரேனியஸ் குழந்தை இல்லாதவராக இருந்தவரும் பெரிய பண்ணைக்குச் சொந்தக்காரருமான பெரியப்பா W.A. ரேனியஸ் அவர்களால் ரேனியஸ் ஐயரவர்கள் வளர்க்கப்பட்டார். பிற்காலத்தில் தமது திரண்ட சொத்துக்கு தாம் வளர்த்து வந்த தம்பி மகன் ரேனியஸையே வாரிசாக்க திட்டமிட்டிருந்தார். பக்திமிக்க பெரியப்பா வீட்டிற்கு இந்திய மிஷனரி ஊழியங்கள் குறித்த பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தன. அவற்றை வாசித்த ரேனியஸ் இந்தியாவிற்கு ஊழியம் செய்ய செல்ல வேண்டும் என தம்மை அர்ப்பணித்தார். பக்திமிக்க பெரியப்பா மற்றும் பெரியம்மா இருவரும் ரேனியஸிற்கு விதவைத் தாயாரைப் பராமரிக்கும் பொறுப்பு இருப்பதையும், தந்தை இல்லாக் குடும்பத்தை தலைமை தாங்கி வழி நடத்தும் பொறுப்பு இருப்பதையும் சுட்டிக்காட்டி அயல் நாட்டிற்கு ஊழியத்திற்கு செல்ல வேண்டாம் என வலிமையாக தடுத்தனர். ரேனியஸ் ஐயரவர்களின் உடன்பிறந்தோரும் (சகோதரர் வில்லியம்) இதே காரணத்தை சுட்டிக்காட்டி தடுத்தனர். ஆனாலும் குடும்ப பொறுப்புகளை தியாகம் செய்து ‘ஊழியமே மிக முக்கியமானது‘ என உணர்ந்து 1814 இல் ரேனியஸ் ஐயரவர்கள் தமிழகத்திற்கு 1814 இல் ஊழியத்திற்கு வருகை தந்தார்கள். 1820 முதல் 1838 வரை பாளையங்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு செய்த நற்செய்தி பணிகள் மற்றும் கல்விப் பணிகள் மூலம் சுமார் 400 திருச்சபைகளும் சுமார் 150 பள்ளிகளும் உருவாயின.

### பொறாமை மற்றும் காழ்ப்புணர்ச்சி கொண்ட ஊழிய மேலிடம்

ரேனியஸின் அபரிதமான ஊழிய வளர்ச்சியைக் கண்டு பொறாமையுடன் காழ்ப்புணர்ச்சி கொண்டு செயல்பட்டு வந்த C.M.S ஊழிய மேலிடத்தின் மத்தியில் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது நற்செய்தி அறிவிப்பதே தலையாயக் கடமை என கடின உழைப்போடு கூட இரவு பகல் பாராது ரேனியஸ் ஐயரவர்கள் நற்செய்திப் பணியாற்றினார்.

### இரவு நேர கொடை விழாக்களில் நற்செய்தி பணி

சாமக்கொடை எனும் இரவு நேர கொடை திருவிழாக்களில் திரளான மக்கள் ஒன்று கூடுவதைக் கண்ட ரேனியஸ் ஐயரவர்கள் தூக்கத்தைத் தவிர்த்து இந்த திருவிழாக்களுக்கு நள்ளிரவில் சென்று நற்செய்தி அறிவித்ததன் பயனாக ஆழ்வாநேரி உட்பட அநேக சபைகள் தென் தமிழகத்தில் உருவானது.

### கோடை காலங்களில் இடைவிடா ஊழியம்

கோடை காலங்களில் குற்றாலம், கொடைக்கானல் ஊட்டி, ஏற்காடு போன்ற எந்த கோடை வாசஸ்தலங்களுக்கும் செல்லாமல் ‘ஊழியமே பிரதானம்’ என அர்ப்பணிப்போடு செயல்பட்டவர் மிஷனரி ரேனியஸ்.

### குறைந்த வயதில் மரணம்

கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிகளைப் போன்று சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகளும் தியாகத்தோடு அர்ப்பணிப்போடு கடின உழைப்புடன் தூக்கமின்றி நற்செய்திப் பணி செய்ததன் காரணமாகவும், இங்குள்ள அதிக வெப்பம் சார்ந்த தட்பவெப்ப நிலை காரணமாகவும், அக்காலத்தில் இந்தியாவில் போதிய மருத்துவ வசதி இன்மை காரணமாகவும் உடலில் நோய்கள் ஏற்பட்டதால் குறைந்த வயதில் தம் இன்னுயிரை இழந்தார்கள். சீகன்பால்க் ஐயரவர்கள் ( 1682 - 1719) 37 ஆம் வயதிலும், ரேனியஸ் ஐயரவர்கள் (1790 - 1838) 48 ஆம் வயதிலும் மரணம் அடைந்தார்கள்.

தொடக்க கால மிஷனரிகளின் தியாகம் மிக்க அர்ப்பணிப்பை நன்றியோடு நினைவு கூறுவோம் நாமும் அதை முன்மாதிரியாகக் கொண்டு கடின உழைப்பையும் தியாகத்தோடு கூடிய அர்ப்பணிப்பையும் தற்போதைய ஊழியங்களில் காட்டுவோம்.

தமிழ்நாட்டில் முதல் ‘சாதிப் பெண்கள் பள்ளி’யைத் தோற்றுவித்து நடத்திய முதல் தமிழ்ப் பெண் (1859/1863), அச்சு வடிவில் நூல் (நல்ல தாய்) எழுதி வெளியிட்ட முதல் தமிழ்ப் பெண் (1862)

# அன்னம்மாள் சத்தியநாதன்



**நிவேதிதா லூயிஸ்**
**எழுத்தாளர்**

தமிழ்நாட்டில் தமிழ்ப் பெண் ஒருவர் தொடங்கி நடத்திய முதல் பெண்கள் பள்ளி குறித்தும் தமிழ் மண்ணில் தமிழ்ப் பெண் ஒருவர் எழுதி அச்சில் வெளிவந்த முதல் நூல் குறித்துமான இந்தச் சிறு குறிப்பு அன்னம்மாள் கிளார்க் என்ற பெண்மணி தன் தாய் குறித்து 1901ம் ஆண்டு எழுதி வெளியிட்ட **“அன்னம்மாள் சத்தியநாதன் அம்மாளின் ஜீவிய விர்த்தாந்தம்”** என்ற நூலில் காணக்கிடைக்கிறது.

“தென்னிந்தியக் கிறிஸ்தவர்களில் டபிள்யூ.டி.சத்தியநாதனின் மனைவி அன்னம்மாள் சத்தியநாதனைப் போல மதிக்கப்பட்ட பெண்மணி வேறெவரும் இல்லை. கால் நூற்றாண்டுக்கும் மேலாக இந்துப் பெண்மணிகளிடம் கிறிஸ்தவக் கல்வியைக்கொண்டு சேர்த்ததிலும் பல செயல்களில் அவரது கருணையும் கண்டு கிறிஸ்தவரல்லாதாரும் அவரைப் போற்றினர்”, என அவரது மகன் சாமுவேல் சத்தியநாதன் தன் தாயைக் குறித்து தன் ‘இந்தியக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை’ (Sketches of Indian Christians) நூலில் எழுதியுள்ளார்.

நான்கு தலைமுறையினராக கிறிஸ்தவர்களாக வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மதபோதகர் தேவசகாயம் ஜானின் மகளாக மாயவரத்தில் 30 ஏப்ரல் 1832 அன்று அன்னம்மாள் ஆரோக்கியம் பிறந்தார். இங்கிலாந்து தேவாலயம் நியமித்த முதல் தென்னிந்திய போதகர் இவர். இவரது மூதாதையருள் ஒருவரான தானியல் பிள்ளை ஹைதர் அலியிடம் பணியாற்றியவர். தஞ்சையிலும் அதைத் தொடர்ந்து நெல்லையிலும் போதகராக பணியாற்றிவந்த தேவசகாயம் ஜான், தன் மகள் அன்னம்மாள் மேல் மிகுந்த

அன்பு கொண்டிருந்தார். ஊழியத்துக்கு செல்லும்போதும் வாசிக்கும்போதும் பயணிக்கும்போதும் அவரது வழித்துணையாக மகளை அருகே வைத்துக்கொண்டார்.

பதினான்கு வயது முதலே கிறிஸ்துவ மறைபரப்புப்பணியில் அன்னம்மாள் ஈடுபடத் தொடங்கினார். பெண்கள் பள்ளி ஒன்றில் படித்துவந்த பெண்களின் உடல், உள்ளத் தேவைகளை கவனித்து உதவிவந்தார். சிறு வயது முதலே குழந்தைகள் மேல் அன்னம்மாளுக்கு பெரும் ஈடுபாடு இருந்ததால் அவரால் குழந்தைகளுடன் ஒன்ற முடிந்தது. ஆதரவற்ற குழந்தைகள், பெற்றோரை இழந்த குழந்தைகள், ஏழைக் குழந்தைகள்மேல் தனி வாஞ்சை கொண்டிருந்தார் அன்னம்மாள். நெல்லை மிஷன் கீழ் இயங்கிவந்த கடாட்சபுரம் சேகரத்தின் 'சின்னம்மாள்' என்றே அன்னம்மாள் அறியப்பட்டார்.

1837ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிளாக்பர்ன் என்ற மிஷனரியின் மனைவி கடாட்சபுரத்தில் 'நார்மல் பள்ளி' ஒன்றைத் திறந்து பெண்களுக்கு கல்வி கற்றுத்தந்தார். 1841ம் ஆண்டு அவர் இங்கிலாந்து திரும்பியபின் இந்த நார்மல் பள்ளியை நிர்வகிக்கும் பொறுப்பு அந்த சேகரத்தின் போதகரான தேவசகாயம் ஜானுக்குக் கிடைத்தது. இந்தப் பள்ளியில்தான் அன்னம்மாள் பயின்றார்.

1849ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அன்னம்மாளுக்கும் புதிதாக மதம் மாறிய வில்லியம் தாமஸ் சத்தியநாதன் என்ற மறைப்பணி மாணவருக்கும் திருமணம் நடந்தேறியது. செல்ல மகளாக தந்தையிடம் வளர்ந்த பெண், கணவரின் சொற்ப ஊதியத்தில் வாழ்க்கையைத் தொடங்கினார். தம்பதிக்கு ஐந்து பெண்கள். இரண்டு ஆண்கள் என ஏழு குழந்தைகள் பிறந்தனர். 1857ம் ஆண்டு சென்னை டவ்டன் கல்லூரியில் படிப்பைத் தொடர சத்தியநாதன் சென்றபோது, அன்னம்மாளும் அவருடன் சென்றார். ஈராண்டுப் படிப்பை அவர் முடித்ததும் அவரை நெல்லைப் பகுதியில் மறைபரப்புப் பணிக்கு சி.எம்.எஸ். மிஷன் அனுப்பியது. 1859ம் ஆண்டு வடநெல்லை திருவில்லிப்புத்தூர் சேகரத்தில் பணியாற்ற அனுப்பப்பட்டார். ஏற்கனவே அங்கு மறைபணியாற்றிவந்த ராக்லாந்து மிஷனரிக்கு உதவியாக அவ்வப்போது அந்தப் பகுதிக்கு சத்தியநாதன் முன்னரே வந்துசென்றுள்ளார். ராக்லாந்து சத்தியநாதனுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்துள்ளார். கணவர் சத்தியநாதனுக்கு உதவியாக, தான் வசித்த வீட்டில் அப்பகுதியில் வசித்த சிறுமிகளுக்கு அன்னம்மாள் கல்வி கற்பித்துவந்தார்.

1862ம் ஆண்டு டிசம்பர் மாதம் அன்னம்மாளின் கணவர் சத்தியநாதன், ஆங்கிலிகன் பாதிரியாக அபிசேகம் செய்யப்பட்டார். இதே ஆண்டுதான் அன்னம்மாள் இந்து சகோதரிகளுக்கும் புதிதாக கிறிஸ்தவர்களாக மதம் மாறிய பெண்களுக்கும் குழந்தை வளர்ப்பில் வழிகாட்டும் 'நல்ல தாய்' என்ற நூலை எழுதினார். பெண் ஒருவர் தமிழில் எழுதி அச்சிட்ட முதல் நூல் இதுவாகலாம். இந்த நூலின் நான்காம் பதிப்பை திருத்தி அவரது மகள் அன்னம்மாள் கிளார்க் 1896ம் ஆண்டு நவம்பர் 16 அன்று வெளியிட்டார்.

"1862ம் ஆண்டு கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கம் இதனைப் பதிப்பித்தபோது, இவ்வாறான ஒரே நூலாக நல்ல தாய் இருந்தது. வடக்கு நெல்லையில் பணியாற்றி வந்த சி.எம்.எஸ். மிஷனின் போதகர் ஆர் ஆர் மெடோஸ் அறிவுறுத்தலின் பெயரால் இந்தச் சிறிய நூலை எழுதியதாக என் தாயார் அன்னம்மாள் இதன் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் எழுதியுள்ளார்", என அன்னம்மாள் இந்நூலின் நான்காம் பதிப்பு முகவுரையில் விளக்கியுள்ளார்.

"என் தாயார் மரித்தும் இந்த நூலின் மூலமாய் இன்னும் பேசுகிறார்கள். தன் தேசத்திலுள்ள ஜனங்கள் புத்தியிலும் பக்தியிலும் மற்றும் சகல நல்ல விஷயங்களிலும் சிறந்து விளங்கவேண்டுமென்பது என் தாயாருடைய சொல்லமுடியாத கவலையாய் இருந்ததென்பது இந்த புத்தகத்தை வாசிப்பதினால் தெரியவரும். இந்த தேசமும், தேசத்திலுள்ள ஜனங்களும் முன்னுக்கு வரவேண்டுமானால் அது இந்தத் தேசத்திலுள்ள ஆண்களாலல்ல, ஸ்திரீகளாலேயே ஆகவேண்டும். ஸ்திரீகளிலும் தாய்மாராலேயே இந்தத் தேசத்திற்கு நன்மை உண்டாக வேண்டியதாயிருக்கிறது. தாய்மார் எல்லோரும் நல்ல தாய்மாராக இருப்பார்களானால், அவர்களுடைய பிள்ளைகளும் நல்லவர்களாவார்கள். இந்தத் தேசமும் கடவுள் கிருபையால் சீக்கிரம் நல்ல தேசம் ஆகிவிடும். ஆகையால் **'நல்ல தாய்'** என்ற இந்தச் சிறுநூல் இத்தேசத்திலுள்ள சகோதரிகள் எல்லாருக்கும் உதவியாயிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை", எனவும் அன்னம்மாள் கிளார்க் தன் முன்னுரையில் தெளிவுபடுத்துகிறார். ஒரு பெண்ணன்றி வேறு யாரால் இப்படி சிந்தித்திருக்க முடியும்? தமிழில் பெண் ஒருவர் எழுதி அச்சில் வெளிவந்த முதல் நூலே, குழந்தை வளர்ப்பு குறித்து நூற்று அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பேசியிருக்கிறது!

நூல் எட்டு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது; எட்டு கடிதங்களின் தொகுப்பாக இந்நூல் உள்ளது. அவை முறையே தாய் கடமை, தாய் சொல் 1, தாய் சொல் 2, தாய் வருத்தம், தாய் குற்றம் 1, தாய் குற்றம் 2, தாய் போதனை, தாய் சந்தோஷம் என்பன. ஒவ்வொரு கடிதத்திலும் சம்பவங்களும் கதைகளும் விவரிக்கப்பட்டு அவை சொல்லும் நீதி விளக்கப்பட்டுள்ளது.

"உன் பிள்ளைகள் குற்றம் செய்யும்போது நீ அவர்களிடத்தில் சினந்த முகத்தைக் காட்டாமல் குளிர்ந்த முகமுமாய் அன்பாயும் உருக்கமாயும் புத்தி சொல்வாயானால்; அது நன்றாய் அவர்களுடைய இருதயத்தில் தைக்கும். பிள்ளை சீர்ப்பட இதுவே நல்ல வழி", "வாயினாலே பிள்ளைகளைப் பார்த்து, பிள்ளைகளே! நீங்கள் பொய் சொல்லக்கூடாது, திருடக்கூடாது, ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள், பதிலுக்குப் பதில் தீமை செய்யவேண்டாம்; ஆங்காரம் கோபம் பொறாமை கொண்டவர்களாயிராதீர்கள்; என்று சொல்லுகிறது வருத்தமல்ல; நம்முடைய நடத்தையினாலே அப்படிக்காட்டினால்தான் சரி; அப்போதுதான் பிள்ளைகள்

சீர்ப்படுவார்கள்", என தன் கடிதங்களில் தாய்க்கு அறிவுரை சொல்கிறார் அன்னம்மாள்.


இரண்டாம் பதிப்புக்கு சான்றுரைக்கும் மதராஸ் கிறிஸ்தவ மாநிலமொழி சங்கத்தின் (Christian Vernacular Society of Madras) நான்காம் ஆண்டறிக்கை (1862-1863), "பல நூற்றாண்டுகளுக்கு முன் நூல் எழுதிய பெண் அவ்வையார்; ஆனால் அவருக்கு பிறகு நீண்டகாலம் பெண்கள் எழுதவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பாக தஞ்சை போதகரின் மகள் போதகர் பைக் எழுதிய 'முற்காலத்திய பக்தி' (Early Piety) என்ற நூலை மொழியாக்கம் செய்து வெளியிட்டிருந்தாலும், பெண் ஒருவர் எழுதிய முதல் நேரடிப் படைப்பாக 'நல்ல தாய்' மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இதனை எழுதியவர் தேவசகாயம் ஜானின் மகளும் மிஷனரி மனைவியுமாகிய திருமதி சத்தியநாதன்" எனத் தெளிவுபடுத்துகிறது.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் வசித்த சத்தியநாதன் தம்பதி, 1863ம் ஆண்டு சென்னைக்கு மாற்றப்பட்டனர். அங்கு அதே ஆண்டு மே மாதம் பள்ளி ஒன்றை பெண்களுக்காகத் தொடங்கியதை அன்னம்மாள் தன் வழிகாட்டியும் ஆசிரியருமான கரோலினுக்கு கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார். அன்னம்மாள் தொடங்கிய 'பள்ளியில்' பத்து சிறுமிகள் பயின்றனர் எனவும் "23 ஆண்டுகளுக்கு முன்பே (1863) அவர் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார்", எனவும் 1886ம் ஆண்டு சென்னை வந்த கிறிஸ்டினா ரெய்னி என்ற ஆங்கிலேயர், அன்னம்மாள் குறித்து தன் 'நம் இந்திய மிஷன் களத்துக்கு ஒரு பயணம்' (A Visit to our Indian Mission Field) நூலில் பதிவு செய்திருக்கிறார். பள்ளிக்கான விளம்பர அறிவிப்பு ஒன்றில், "சிறுமிகள் இங்கேதான் எழுத்தை வாசிக்கக் கற்றுக்கொண்டனர். அவர்களுக்கு இன்று இருக்கும் அறிவுக்கு இப்பள்ளி மட்டுமே காரணம். இவர்களில் பெரும்பாலானவர்கள் கறுப்பர் நகரத்தில் அதிகம் வசிக்கும் வணிகர் சமூகத்தினர்", எனக் கூறப்பட்டுள்ளது.

ஜிபர்ன் அம்மையாருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அன்னம்மாள், "நான் சில ஆதிக்க சாதிப் பெண்களுக்கு கல்வி தரவேண்டும் என்பதற்காக மட்டுமே இந்தப் பள்ளியைத் திறக்கவில்லை. இதன்மூலம் இரட்டிப்பு பயனாக **ஜெனானா மிஷனை** நடத்த விரும்பினேன். இந்தச் சிறுமிகள் மூலமாக இவர்கள் வீடுகளுக்குள் நுழையமுடியும் என நம்புகிறேன். அவர்களது சில பெண் உறவினர் என்னை சந்திக்கின்றனர். அவர்களது நம்பிக்கையைப் பெற என்னாலானது அனைத்தையும் முயற்சிக்கிறேன். இந்தப் பள்ளி நல்லபடியாக செயல்பட்டு வெற்றிபெறும் என நான் நம்புகிறேன். ஆதிக்க மற்றும் இடைநிலை சாதிப் பெண்களுக்காக தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பள்ளி இது என்பதால், இது வெற்றிகரமாக இயங்கவேண்டும் என ஆசைப்படுகிறேன்", என்கிறார். **பிர்மிங்ஹாம்** பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள கரோலின் ஜிபர்ன் அம்மாளின் கடிதங்களில் அன்னம்மாள் அவருக்கு எழுதிய இக்கடிதமும் உள்ளது என பிப் பாய்ன்டன் குறிப்பிடுகிறார்.

பத்து மாணவிகளுடன் தொடங்கிய அன்னம்மாளின் சிறு பள்ளி, இருபத்தைந்து ஆண்டுகளில் 500 மாணவிகள் கொண்ட ஆறு பள்ளிகளாகப் பெருகியது (சிந்தாதிரிப்பேட்டை, கோமளீசுவரன்பேட்டை, பூந்தமல்லி, பார்க் டவுன், நேப்பியர் பார்க், மதராஸ் நார்மல் பள்ளிகள்). அன்னம்மாளின் பணியைக் கண்ட மதராஸ் ஆளுநர் நேப்பியர் துரையின் மனைவி அவரது நெருங்கிய தோழியானார். நேப்பியர் பூங்காவில் 16,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டிருந்த புதிய கட்டிடத்தை பள்ளி ஒன்றைத் திறக்கவேண்டும் என்ற வேண்டுகோளுடன் நேப்பியர் பெருமாட்டி அன்னம்மாள்வசம் ஒப்படைத்தார். 'நேப்பியர் பார்க் இந்து பாலிகா பாடசாலை' அங்கு இயங்கத் தொடங்கியது. நேப்பியருக்குப் பின் மதராஸ் ஆளுநராக பணியாற்றிய ஹொபார்ட் துரையின் மனைவி, தஞ்சை ராணி என அக்காலத்தில் சமூக அக்கறை கொண்ட பெண்கள் பலரும் அன்னம்மாளுடன் தோழமை பாராட்டினர்.

1878ம் ஆண்டு சத்தியநாதன் தம்பதியை இங்கிலாந்து வருமாறு வெளிநாட்டு மிஷன் கமிட்டி அழைப்பு விடுத்தது. 13 மார்ச் 1878 அன்று சிந்தாதிரிப்பேட்டை சீயோன்


THE GOOD MOTHER

நல்ல தாய்

இது
இத்தேசத்து ஸ்திரீகளுக்குப் பிரயோசனமாக
அன்னாள் சத்தியநாதன் அம்மாளால்
எழுதப்பட்டு
அன்னம்மாள் கிளார்க் அம்மாளால்
புதுப்பித்து திருப்பப்பட்டது

"பிள்ளையை நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து;
அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்."
நீதிமொழி, 22. 6.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
MADRAS ALLAHABAD CALCUTTA RANGOON COLOMBO
1921

ஆலயத்திலிருந்து தம்பதி கிளம்பினார். அவர்களை வழியனுப்ப 'சில பிராமணப் பெண்களும் அனேக இந்துக்களும் வந்திருந்தனர்' என தன் நாள்குறிப்பில் அன்னம்மாள் எழுதியுள்ளதாக அன்னம்மாள் கிளார்க் குறிப்பிடுகிறார். தன் இங்கிலாந்து பயணத்தை 'இங்கிலாந்து தேசத்தில் ஆறுமாத சஞ்சாரம்' என பயண அனுபவ நூலாக அன்னம்மாள் எழுதியிருக்கிறார். மே 17, 1878 அன்று ஹைட் பார்க்கில் நடைபெற்ற தூரக் கீழை நாடுகளில் பெண்கல்வி முன்னேற்ற மிஷன் கூட்டத்தில் சத்தியநாதன் உரையாற்றினார். தமிழ்ச்செய்யுள் ஒன்றை பாடியவர், பெண் கல்விக்கென **ஜெனானா மிஷன்** செய்யும் முன்னெடுப்புகள் குறித்துப் பேசினார். ரஷ்ய சார் மன்னருக்கு எதிராக இங்கிலாந்துப் படைகளுடன் இந்தியப் போர் வீரர்கள் போராடுவதுபோல் இங்கிலாந்துப் பெண்களும் இந்தியப் பெண்களுக்குக் கல்வி கிடைக்கப் போராடுவார்கள் என நம்புவதாகப் பேசினார். அதற்கான தொடக்கப் பணிகளை தன் மனைவியும் தேவசகாயம் ஜான் போதகரின் மகளுமாகிய அன்னம்மாள் செய்துவருவதாகக் கூறினார். அப்போது சென்னையில் 4 இடங்களில் 20 ஜெனானா மிஷன்கள் இருந்தன; அவற்றில் இந்து பிராமணப் பெண்கள் உள்பட 50 பேர் உறுப்பினர்களாக இருந்தனர் என்றார். அவர்களது பணியைப் பாராட்டி ஷாஃப்ட்ஸ்புரி துரை அன்னம்மாளின் பெயர் பொறித்த விவிலியம் ஒன்றை வழங்கினார்.

அக்டோபர் 16 அன்று அங்கிருந்து தம்பதி புறப்பட்டனர். ஆனால் புறப்படும் முன், தன் 14 ஆண்டு மிஷன் பணி பற்றிய சிறு நூல் ஒன்றை (A Brief Account of Zenana Work in Madras, Anna Satthianadhan, Seeley & Co., 1878) அங்கேயே எழுதி அன்னம்மாள் வெளியிட்டார். இங்கிலாந்திலிருந்து திரும்பியது முதலே உடல்நலமின்றி அன்னம்மாள் தவித்தார். மூன்றாண்டு அவதியுற்றவர், 24 அக்டோபர் 1894 அன்று இறந்தார்.

அன்னம்மாளின் மரணத்துக்கு இந்து நாளிதழ் இரங்கல் செய்தி வெளியிட்டது. **"ஓர் அழகிய வாழ்க்கை இன்று முடிந்துபோனது. அவரது எளிமை, தனக்காக அல்லாமல் பிறருக்காக வாழ்ந்த நேசம், தன் பணியின் மேல் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத காதல் போன்றவற்றால் அனைவரையும் ஈர்த்தவர். மதராஸின் மண்ணின் மைந்தர்களான கிறிஸ்தவர்கள் மத்தியில் அவர் பெயர் என்றும் நிலைத்திருக்கும்",** என்றது அந்த செய்தி. ஆம், இம்மண்ணின் முதல் பெண்கள் பள்ளியைத் தொடங்கியவர், அச்சேறிய முதல் தமிழ் நூல் எழுதிய பெண் என பல பரிமாணங்களில் அன்னம்மாள் சத்தியநாதனின் புகழ், இம்மண்ணுள்ளமட்டும் நிலைத்திருக்கும்.

'இக்கட்டுரையின் சுருக்கப்பட்ட வடிவம் இந்து தமிழ் திசை நாளிதழில் வெளியானது'

## நெல்லை அப்போஸ்தலன் 233 வது பிறந்ததினத்தில் ....

இன்று 5-11-2022. திருநெல்வேலி அப்போஸ்தலன் சங்கை C.T.E. ரேணியஸ் ஐயரின் (1790-1838) 233 ஆவது பிறந்த தினம். அவரால் இரட்சிப்பிற்குள் அழைக்கப்பட்டவர்கள் சேலம் தொழிற்கல்வி பயிலகத்தில் பணிசெய்ய சங்கை J.M.லெக்லர் ஐயரால் 1840ல் சேலம் அழைக்கப்பட்டு அவர்களின் பணிகள் யாவும் முடிவடைந்த நிலையில் கி.பி.1861 ல் அவர்கள் சேலத்தில் குடியிருக்க அஸ்தம்பட்டி கிராமத்தின் மேற்காக ஒரு இடத்தை வாங்கி அங்கே அவர்கள் தங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொண்டு, தாங்கள் வழிபட அந்த இடத்தின் வடமேற்கில் ஒரு மண்குடிசை ஆலயத்தையும் கட்டி, இந்த இடத்திற்கு பாளையங்கோட்டை முருகன் குறிச்சியில் சங்கை C.T.E.ரேணியஸ் ஐயர் அடக்கஸ்தலமான 'அடைக்கலாபுரம்' நினைவாக 'அடைக்கல நகர் 'என்று பெயரிட்டனர். இந்த நாள் 5-11-2022 'அடைக்கலநகர்தினம்' என அழைக்கப்படுவதாக.

அன்று 1950 களில் வாலிபர் சங்கம் உபயம் செய்த அடைக்கல நகர் பெயர் பலகைக்கு இன்று காலை 10 மணிக்கு சேலம் வரலாற்றுச் சங்கம் சார்பில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.



பங்கேற்றோர்: திரு.J.பர்னபாஸ், திரு.T.சாமுவேல், திரு.K.கிறிஸ்டோபர், திருமதி.ஹேமாவதி, திருமதி.பிரியதர்சினி, திருமதி.ஆஷா ,செல்வன் ஜேனல் ஜெபக்குமார் ஆகியோர்.

# சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் இரேனியஸ் பிறந்த தின சிறுகுறிப்பு

1. சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் இரேனியஸ் ஐயர் திருநெல்வேலி பகுதியில் சுமார் நானூறு சபைகளையும் பல பள்ளிகளையும் உருவாக்கிய உத்தம ஊழியர்.
2. 1790-ஆம் ஆண்டு ஜெர்மனி தேசத்தில் போர்ட்ஸ் கிராண்ட்னஸ் என்னும் ஊரில் பிறந்தார் இரேனியஸ்.
3. 1812-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் தேதி இரேனியஸ்க்கு பிரேஷிய நாட்டு சுவிசேஷ லுத்தரன் திருச்சபை முறைப்படி குருப்பட்டம் பெற்றார்.
4. சர்ச் மிஷன் சங்கத்தாருக்கு இரேனியஸூம் அவருடைய நண்பர் ஷ்னாரும் தங்களை வேறு நாட்டிற்கு ஊழியராக அனுப்ப விண்ணப்பம் செய்தனர்.
5. C.M.S. சங்கத்தார் 1815-ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து இரேனியசையும், ஷ்னாரையும் சென்னையில் ஊழியம் செய்ய அனுப்பினார்.
6. ஐந்தே மாதங்களில் இரேனியஸ் தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் கற்பிக்கவும், தெருப்பிரசங்கம் செய்யவும் கூடியவரானார். அவருடைய வீட்டில் ஒவ்வொரு புதன்கிழமையும் ஜெபக்கூட்டம் நடைபெற்று மக்களுக்கு நற்செய்தி அறிவித்தார்.
7. சென்னை ஜியார்ஜ் டவுனில் தங்கி ஊழியம் செய்ய ஆரம்பித்தனர். பிப்ரவரி மாதத்திலிருந்து ஊழியத்தை ஆரம்பித்தனர்.
8. இரேனியஸ் ஐயர் 1815, மே மாதம் 1-ஆம் தேதி ஜியார்ஜ் டவுனில் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்தார்.
9. பத்து நாட்களில் 46 பேர் சேர்ந்தனர். ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவர்களிடத்தில் இருந்த சோம்பல், சாதி வேறுபாட்டை இரேனியஸ் ஐயர் கண்டித்தார்.
10. 1817-ஆம் ஆண்டு துவக்கத்தில் 17 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். 1817-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜியார்ஜ் டவுனில் ஆலயம் கட்ட இரேனியஸ் அடிக்கல் வைக்க விரும்பினார். ஆலயம் 30-ம் தேதி அஸ்திபாரம் இடப்பட்டது.
11. 1816-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7-ஆம் தேதி வான் சோமரன் என்னும் டச்சு பக்திமானின் மகள் அனியை இரேனியஸ் திருமணம் செய்தார்.
12. 1817-ஆம் ஆண்டு நவம்பர் 5-ஆம் நாள் இரேனியஸ் சென்னை வேதாகமச் சங்கத்தை நிறுவினார்.
13. 1815-ஆம்ஆண்டு முதல் தம்முடைய ஊழியக்காலம் இறுதி வரை தமிழ் வேதாகம மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டார்.
14. 1818-ஆம் ஆண்டில் சென்னை காலரா வியாதியால் தாக்கப்பட்டபோது இரேனியஸ் சென்னையிலேயே இருந்து நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உதவி செய்தார்.
15. 1820-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஊழியம் செய்ய இரேனியஸ் அனுப்பப்பட்டார்.
16. 1820-ஆம் ஆண்டில் இரேனியஸ் வண்ணார்பேட்டையில் ஒரு பள்ளியை ஆரம்பித்தார்.
17. ஹாவ்ப் ஐயரால் 1818-இல் துவக்கிய செமினரியை 1821-இல் இரேனியஸ் மூடிவிட்டார். ஜாதி வேறுபாடு பார்ப்பதில்லை என உறுதியளித்தனர். ஆதலால் 1822 மே மாதத்தில் செமினரியை மறுபடியும் திறந்தார்.
18. திருநெல்வேலியில் ஊழியம் செய்ய விரும்பிய இரேனியஸ் 1822 ஜூலை 16-ஆம் தேதி புதன்கிழமை திருநெல்வேலியில் மூடப்பட்டிருந்த ஆங்கிலப்பள்ளி கட்டிடத்தில் ஆராதனை நடத்திப் பிரசங்கத்தையும் செய்து ஊழியத்தை ஆரம்பித்தார்
19. 1825-ஆம் ஆண்டு C.M.S சபைகள் 90, குடும்பங்கள் 898, சபை மக்கள் 3000-ற்கு மேற்பட்டோராகும்.
20. பாளையங்கோட்டையில் வெங்கு முதலியார் என்ற ஒரு மிகப் பெரியப் பணக்காரர் இருந்தார். அவர் பள்ளிச் சேவைக்காக இரேனியஸுக்கு ரூபாய் நூறு நன்கொடை அனுப்பினார்.
21. வெங்கு முதலியார் 93 அடி நீளம், 62 அடி அகலமுள்ள கட்டிடத்தோடு கூடிய தமது நிலத்தை 750 ரூபாய்க்கு மிஷனுக்கு கொடுத்தார்.
22. 1826-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி பாளையங்கோட்டையில் இரேனியஸ் ஆலயம் கட்ட அஸ்திபாரமிட்டார்.
23. 1829 முதல் செமினரியை பிரித்து பிரிப்பராண்டி என பெயரிட்டு உபதேசியாரை பயிற்றுவித்தார்.
24. சாத்தான்குளம் ஆலயத்திற்கு 1829-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எழுபத்தைந்துபடி அரிசி கொண்ட மூடைகள் முதல் அருளூர் உபதேசியார் முத்தையனின் மனைவி தாயாரளுளாயி அம்மாளின் காணிக்கையாக வந்தது.
25. திருநெல்வேலி ஊழியத்திற்கென ஒவ்வொரு குடும்பத் தலைவரும் ஒரு கால் பணம் (23 காசு) ஒரு ஆண்டிற்கு ஒருமுறை கொடுக்க வேண்டுமெனக் கேட்டார்.
26. காலராவில் மரித்த குடும்பங்கள், விதவைகளானவர்களுக்கு உதவி செய்ய டோனாவூர் சேகர சகாயநிதி என்று ஆரம்பித்து உதவி செய்தார்.
27. உபாத்தியார் கைம்பெண் நிதியையும் இரேனியஸ் ஆரம்பித்தார். 1834 ஜூலை 9-ஆம் தேதி புதன்கிழமை இது ஆரம்பிக்கப்பட்டது. சில வருடங்கள் நடைபெறாமல் இருந்த அது இன்று வரை மாம்பழச் சங்கம் என்ற பெயரில் நடைபெறுகின்றது.
28. இரேனியஸ் ஐயர் மகளுக்கும் முல்லர் ஐயருக்கும் 1834-ஆம் ஆண்டு துவக்கத்தில் பாளையங்கோட்டையில் திருமணம் நடைபெற்றது.
29. இரேனியஸ் ஐயரின் மகன் சார்லஸ் 1845-இல் லண்டன் நகர பேராயரிடம் உதவி குருவாக அபிஷேகம் பெற்று C.M.S.மிஷனெரியாக சுவிசேஷபுரத்தில் டோனாவூரிலும் ஊழியம் செய்தார்.
30. 1838-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5-ஆம் நாள் மாலை 7:30 மணிக்கு இரேனியஸ் ஐயரின் உயிர் பிரிந்தது.
31. 07-06-1938-இல் அவருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்டது.
32. திருநெல்வேலி அப்போஸ்தலன், நானூறு சபைகளைத் தோற்றுவித்த இரேனியஸ் ஐயர் 48 வயதில் மறைந்துவிட்டார்

சுஜித்

அத்தியாயம்

6

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர்.த.ஜான்சி பால்ராஜ்

நாவலாசிரியர் , திருநெல்வேலி

jansy.emmima@gmail.com

எனக்கும் பெரியகுளம் தான். அங்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கு. அதில் என்னை படிக்க அனுப்பினார்கள். அது ஒரு கிறிஸ்தவ பள்ளிக்கூடம். அதில் கொஞ்சபேர் தான் பொம்பள பிள்ளைங்க படித்தோம். என்னைக்காவது தான் பொம்பள புள்ளைங்க பள்ளிக்கு வருவாங்க. ஆனா நான் ஒருநாள் விடாம போய்ருவேன். இரண்டே வருசத்தில எழுதவும் வாசிக்கவும் கத்துக்கிட்டேன். எனக்கு எங்கவீட்டைவிட அந்தப் பள்ளிகூடம் தான் ரொம்ப பிடிச்சி போச்சு. ஏன்னா அங்க படிக்கவந்த புள்ளைங்க எல்லோருமே வேற வேற சாதியிலும் மதத்திலும் உள்ளவங்க. எல்லோரையும் அங்குள்ள டீச்சரும், சார்வாளும் ஒரேமாதிரி சமமா நடத்துவாங்க. எந்த வேறுபாட்டையும் காட்டல. அந்த விசயம் தான் எனக்கு முதல்ல பிடிச்சது.

ஆனா, எங்க வீட்லயும் ஊரிலேயும் பள்ளிக் கூடத்துல நம்ம சொந்தக்காரங்களோட மட்டும் தான் பேசணும், வேற சாதி புள்ளைங்க்கூட சேக்காளி வைக்க கூடாதுன்னு அடிக்கடி சொல்வாங்க. அப்படி வேறுபாடு காட்டியே நடத்தவும் செய்வாங்க. நாங்க பொற்கொல்லர் ஆசாரி சாதியாம். உசந்த சாதியாம். . . . ! அதனால நமக்கு கீழுள்ள சாதிக்காரங்க கூடல்லாம் பேசவோ தண்ணிவாங்கி குடிக்கவோ கூடாதுன்னு நெதமும் எங்க தாத்தா சொல்லிச் சொல்லிதான் பள்ளிக்கு அனுப்பும்.

எங்க சார்வாள் ஒவ்வொரு நாளும் காலையில் வகுப்பு தொடங்கும் முன்னாலேயும் பள்ளிக்கூடம் முடியும் நேரத்திலேயும் எல்லோரும் ஒன்னா நிற்கவச்சி பாட்டு படிச்சு செபம் செய்ய வைப்பாங்க. பைபிள் வாசிச்சி அதிலுள்ள கதைகள சொல்வாங்க. நிறைய புத்திமதிகளை எங்களுக்கு சொல்வாங்க, குறிப்பா ஆண்டவர் பார்வையில் எல்லாரும் சமம்தான், சாதி மதம் என்று எந்த வேறுபாடும் பார்க்காம வாழணும் என்று அடிக்கடி போதனை செய்வாங்க. எனக்கு அந்த விசயம் ரொம்ப பிடிச்சிருச்சி. பைபிளில் இருக்கும் அறிவுரைகளின்படியே அந்த டீச்சரும் சார்வாளும் எங்க எல்லோரிடமும் எந்த வேறுபாடும் காட்டாம சரிசமமா நடந்து கொள்வதுதான் என்னை ரொம்ப ரொம்ப தொட்டுச்சி.

பாடம் படிப்பதைவிட அந்த டீச்சரம்மா சொல்லும் கதைகளுக்காகவே காத்திருப்பேன். அதில் எனக்குவரும் சந்தேகத்தையும் கேட்பேன். அவுங்களும் ரொம்ப தெளிவா பதில் சொல்வாங்க. என் மனசு முழுதும் அவுங்க சொல்லும் பைபிள் கதைகளாலும் அறிவுரைகளாலும் நிறைஞ்சிடுச்சி. என்னை அறியாமலே என் செயலிலும் பேச்சிலும் மாற்றம் ஏற்பட்டுச்சி. எனது ஊரிலும் வீட்டிலும் உள்ள மனுசங்களை நான் பார்க்கும் விதமே மாறிடுச்சு.

ஒருநாள் அந்த டீச்சரம்மா எனக்கு ஒரு பைபிள் தந்து படி. . . என்றாங்க. எனக்கு இருந்த சந்தோசத்துக்கு அளவே இல்ல. என் ஆர்வத்தைப் பார்த்துதான் தந்திருப்பாங்க. வேற யாருக்கும் பைபிள் கொடுத்தத நான் பார்த்ததே இல்ல. அந்த டீச்சரம்மா அடிக்கடி சார்வாள்கிட்ட என் ஆர்வத்தை சொல்லி சொல்லி பேசிக் கொள்வதை கவனிச்சிருக்கேன்.

அந்தப் பைபிளை நேரங்கிடைக்கும் போதெல்லாம் வாசிச்சேன். என் தாத்தா அதை கவனிச்சுப் பார்த்துட்டு எல்லோரிடமும் சொல்லிவிட்டார். என்னை பள்ளிக்கூடத்திற்கே கொஞ்சநாள் அனுப்பல. பைபிளயும் பிடுங்கி வச்சிக்கிட்டாங்க.

பிறகு எங்க டீச்சரம்மா என்னைத் தேடி வீட்டுக்கே வந்துட்டாங்க. அவங்களையும் எங்க தாத்தாவும் அப்பாவும் ரொம்பவே திட்டி தீர்த்துட்டாங்க. . . . பிறகு அவுங்க கிட்டையே அந்த பைபிளை கொடுத்து, இனிமேல் இப்படி நடந்தா பள்ளிக்கு அனுப்ப மாட்டேன்னு சொன்னாரு எங்க தாத்தா.

சரின்னு சொன்னாங்க டீச்சரம்மா, மறுநாளிலிருந்து பள்ளிக்குபோனேன். பள்ளிகூடத்துல படிக்க சொன்னதையும் எழுதசொன்னதையும் சீக்கிரமா முடிச்சிட்டு ஒரு ஓரமா போய் பைபிள்ள உள்ளதைதான் வாசிச்சிட்டு இருப்பேன். நான் ஒரு கிறித்தவளா மாறிகிட்டே இருந்தேன். எனது பேச்சிலும் செயலிலும் அது தெரிஞ்சதா எங்க தாத்தா ஓயாம சொல்லி சொல்லி திட்டுவார். . . . இப்படி ஆறுமாசம் போயிருக்கும். . . நான் பெரிய மனுசியாகிட்டேன்.

பிறகு என்னை வீட்டை விட்டு எங்கேயும் அனுப்பல. ஆனா. . . எனக்குள்ள ஏசு பிறந்து நாளொரு மேனியும் பொழுதொறு வண்ணமுமா வளர்ந்து கொண்டே இருந்தார். முன்பைவிட வீட்டில் இருந்தபோது தான் நான் அதிகம் செபம்

செய்யவும் ஏற்கனவே வாசித்து அறிந்து வைத்திருந்த பைபிள் கதைகளை ஒவ்வொன்றா மனத்திற்குள் யோசிச்சிக் கொண்டும் இருந்தேன். என்னால் வீட்டில் நடக்கும் எங்கள் மத சடங்கு சம்பிரதாயங்களில் பங்கு கொள்ள முடியல. அது எனக்கு விருப்பமில்லாம ஆகிடுச்சு. என் வீட்டில் உள்ளவர்களுக்காக, கடமைக்காக அவற்றில் பங்கு கொள்வேன். எனது இந்த மாற்றம் எல்லோருக்குமே தெரிந்துதான் இருந்தது.

இந்த நேரத்தில் தான் ஏமியம்மா பற்றின செய்தி இந்த சுற்றுவட்டாரம் முழுதும் பேசப்பட்டது. குறிப்பாக பொன்னம்மாள் அக்காவும் அவுங்க மகளும் இங்கு வந்துவிட்ட விசயம் பலவிதமான கட்டுக் கதைகளாகத் திரித்து பேசப்பட்டது.

குழந்தைகளை ஏமியம்மா பார்வையாலயே பிடிச்சு கட்டி இழுத்துட்டுப் பெய்ருவாங்கன்னு கதைகதையா அவிழ்த்து விட்டாங்க. . .

கருப்பு, சிவப்பு, மஞ்சள் என்று தினமும் ஒரு குதிரையில் ஊர் ஊராக சென்று சிறுவர்களை தூக்கிட்டுப் போறதா தெருக்களில் கூடிக் கூடி பேசிகிட்டாங்க. . . என்றதும் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். . . ஏமியோடு லட்சுமியும் தான். . !

பொன்னம்மாளை அடுத்து தினமும் ஒருவர் ஏமியம்மையிடம் வந்து சேர்ந்து கொண்டிருப்பதா ஒரு கூட்டம் பேசியது. மீண்டும் சிரிப்பு.

பிறகு. . . ? லட்சுமி ஆர்வம் மிகுதியால் கேட்க. . .

பிறகென்ன. . . . இந்தப் பொய்கள் எனக்கு ஒருவிதத்தில் உதவியாகவே இருந்துச்சு. என்னையும் இங்கு கொண்டுவர துணிச்சலை தந்திருச்சு. நிறைய நாட்கள் நானும் எங்க தெருவிற்கும் அந்த ஏமியம்மா குதிரையில் வந்து என்னையும் தூக்கிட்டு போக மாட்டாங்களான்னு ஏங்கியிருக்கேன். அப்படி நடக்க வேண்டும் என்று செபமும் செய்ததுண்டு என்ற அப்பாவித்தனமான வார்த்தைகளால் அனைவரும் ஒரு கற்பனை உலகிற்கே சென்று கொண்டிருந்தனர். ஏமி சத்தமிட்டு சிரித்து கொஞ்சம் அதைக் கலைத்துதான் பார்த்தார். முடியவில்லை.

எப்படியாவது இங்குவந்து கிறிஸ்தவத்தில் இணைந்து விட வேண்டும் என்று அல்லும் பகலும் நினைத்துக் கொண்டே இருந்தேன்.

ஒருநாள் ராத்திரி நடு இரவில் என்னை யாரோ தட்டி எழுப்பி, எழுந்து வா. . ! என்று சொல்வதை போல உணர்ந்தேன். எழுந்திருச்சி உட்கார்ந்தேன். யாரும் இல்லை. திரும்பவும் படுத்துக்கிட்டேன். சில நிமிடங்களில் மீண்டும் அதே அழைப்பு, எழுந்து வா! என்று.

எனக்கு எங்க டீச்சரம்மா பைபிளில், சாமுவேல் என்ற சிறுவனிடம் ஒரு ராத்திரி இதைப்போலவே கடவுள் அவன் பேரை சொல்லி மூன்றுமுறை கூப்பிட்டதை கதையாக விவரித்துச் சொன்னது நினைவுக்கு வந்துச்சி. உடனே நான் புரிஞ்சிகிட்டேன். இது என் ஆண்டவர் ஏசுவின் குரல் தான், அவர் என்னை ஏமியம்மாவிடம் சென்று சேர சொல்கிறார் என்பதாக நினைத்தேன்.

உடனே அந்த இரவில் யாருக்கும் தெரியாமல் மெல்ல வெளியளறி பண்ணைவிளைக்கு வரும் பாதைக்கு வந்துட்டேன்.

அந்த இருட்டிலா. . . ? –லட்சுமி கேட்டாள்.

ஆமா. . . எனக்கு முதலில் இருட்டாவே தெரியல. ஆனா கொஞ்சதூரம் வந்தபிறகு பயந்து போனேன். அந்த பனங்காட்டு ஓலைகளின் சலசலப்பும் இராத்திரி பூச்சிகளின் சத்தமும் எங்கோ ஊழையிட்ட நாய்களின் சத்தமும் என்னை கதிகலங்க செஞ்சிட்டு.

ம். . . . ம். . . . அவள் கண்களையே பயத்தோடு பார்த்தாள் லட்சுமி.

உடனே மனதிற்குள், ஏசுவே உம்மை நம்பி தான் வெளியில் வந்தேன். என்னை ஏமியம்மாவிடம் கொண்டு விட்டுவிடும் என்று செபித்தேன்.

சில அடிகள்தான் நடந்திருப்பேன். . . தொலைவில் ஒரு விடிலிக்குள் இருந்து வெள்ளைத் தாடியோடு ஒரு தாத்தா, யார்ல அது?என்றார். . .

நான் வந்துகிட்டிருந்த பக்கமாக பார்த்து. நான் வேகமாக நடந்து அவர் கிட்டத்தில போய். . . தாத்தா எனக்கு பண்ணைவிளைக்கு போகணும் என்றேன்.

என்னது. . . . இந்த நேரத்திலயா, ? என்றவர். . . சரி. . வா. . . என்று அவர் முன்னால் நடக்க நான் பயத்தோடு பின்னால நடந்தேன். பெறவு வேறெதெயும் அவர் எங்கிட்ட கேக்கவே இல்ல.

கொஞ்ச நேரத்தில தாத்தா பண்ணைவிளை வந்துட்டதாக சொன்னார். அன்னா தெரியுதுல்லா வேதக் கோயில். . . போயிருவியா தாயி என்றார். ? நான் வேதக் கோயிலை பார்த்த பரவசத்தில். . . . . ஆங். . . என்று வேகமாக தலையாட்டியபடி அவரைத் தாண்டி சில அடிகள் நடந்தேன். பிறகுதான் அந்த தாத்தாவுக்கு நன்றி சொல்லணுமேன்னு திரும்பி பார்த்தேன், அவரை காணவே இல்ல. எனக்கு மூச்சிரைத்தது. நெஞ்சில் கைவைச்சி நன்றி ஏசப்பா, நீங்க தானா அது. . ? என்றேன். அழுகையா வந்துச்சி. . . வேகவேகமா ஓடி வந்து கோயில் வளாகத்துக்குள்ள நுழைஞ்சேன் என்று முடிக்கவும். . .

அம்மா. . . . அம்மா. . . . ஐயா. . . ஐயா. . . என்று சத்தம் போட்டாள் இவள். நாங்க, இந்த லாந்தர் விளக்கோடு கதவை திறந்து வெளியில வந்தோம். அங்கு பதட்டத்தோடு நம்ம சீதாலட்சுமி நின்றிருந்தாள். என்னைப் பார்த்ததும் ஓடி வந்து என் அருகில் வந்து நின்றாள். . . நான் உன்னை அணைத்ததை போலவே அவளையும் . . . . என்றார் சீதாவின் தலையை வருடியபடியே ஏமி. . . !

சீதாலட்சுமியா அது யாரு? என்றாள் லட்சுமி.

வாயைப் பொத்தியபடி கொல்லென சிரித்த அவள் என் பழையபேரது. . . ஏமியம்மா

எனக்கு வைத்தபேர் தான் இந்த ஜெயமணி.

ஓஹோ. . . . !

லட்சுமி ஏமியை மென்மையாக பார்த்தாள்.

ம். . . . உனக்கும் நீ வந்த உடனேயே பெயர் வைத்து விட்டேன் .

அப்படியா. . . . ? என்றனர் இரண்டு மூன்றுபேர் ஒருசேர, பேராவல் அதில் நிறைந்திருந்தது.

ஆமா. . . ப்ரீனா . என்றார் ஏமி.

பரீனா. . . . ப்ரீனா. . . பாரினா. . . . அனைவரும் தங்கள் வாய்க்கு வந்தபடி உச்சரித்துப் பார்த்துக் கொண்டனர்.

ப்ரீனா. . . ஏமி மீண்டும் சரியாக உச்சரித்துக் காட்ட . . . லட்சுமி ப்ரீனாவானாள். . . பூரிப்புடன்.

சரி. . . பிறகு. . . உங்க வீட்டில் உள்ளவங்க உங்களை தேடலையா?. . ப்ரீனா விடாமல் கேட்டாள்.

ம். . . ம். . . . வந்தாவ. . . வந்தாவ. . . . ஊரையே திரட்டிக் கிட்டு இங்க வந்து மிரட்டி பார்த்தாவ. எல்லாம் இன்னைக்கு நடந்துச்சே. . . அதே கதை தான். . . . வேற வழியில்லாம திரும்பி போயிட்டாங்க.

ஆனா. . . . ஒரே ஒரு சின்ன வருத்தம் தான் எனக்கு. . . . !

என்ன. . . அது. . . ? லட்சுமி வினவ, ஏமியும் வெடுக்கென எறிட்டு ஜெயமணியைப் பார்த்தார்.

அது ஒன்னுமில்ல. . . என் அண்ணன் மகன். . . ஜெயவேந்தன். . . அவன் பிறந்தது முதலே நான் தான் அவனை வளர்த்தேன். அவனை என்னிடம் தந்துட்டு அவுங்கவுங்க வேலைய பாப்பாங்க. அவன் அம்மாகிட்ட இருந்ததைவிட என் மடியில் இருந்ததுதான் அதிகம். இன்னும் ஒரு வயதுகூட நிரம்பாதவன். . . அவனை பிரிஞ்சது தான் எனக்கு வேதனை. என்றவள் கண்களை நிரப்பிய கண்ணிரை மேலே விட்டத்தைப் பார்த்தபடி இமைகளால் அடக்கி மீண்டும் கண்களுக்குள்ளேயே தள்ள முயற்சித்தாள்.

எல்லோருடைய கண்களும் கலங்கி நின்றன.

சரிசரி ஜெயமணி, அவன் பெரியவனானதும் உன்னைத்தேடி வருவான். . . கவலைப்படாதே. கண்களைத் துடைத்துக் கொண்டு அந்த வார்த்தைகளை அப்படியே நம்பி திருப்தியடைந்தாள் ஜெயமணி.

உவாக்கரும், மனைவி பர்தாவும் வெளியில் நிலவொளியில் தரையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவரது கையில் பைபிளும் நாட்குறிப்பேடும் இருந்தன.

மணி பதினொன்றை தொட்டுவிட்டது. ஏமியின் அறையில் பேச்சுசத்தம் கேட்டுக் கொண்டிருந்ததை கவனித்த இருவரும் எழுந்து மௌனமாக நடந்து அந்த அறையை நோக்கி வருவதை கண்ட ஏமி. . . ஏதோ சிந்தனையில் இருவரும் ஆழ்ந்திருப்பதை புரிந்து கொண்டு கதவை திறந்தார். இருவரும் வீட்டிற்குள் வந்தனர்.

என்ன. . . . லட்சுமி எப்படி இருக்கிறீர்கள். ? என்றார் உவாக்கர்.

நான் லட்சுமி இல்ல. . . !

பிறகு?

ம். . . . அது வந்து. . . என்றவள் ஏமியை பார்த்து சிரிக்க,

ஆம். . . இனி இவள் பெயர். . ப்ரீனா. . . . என்று எல்லோரும் சேர்ந்து கூற. . .

மிக அழகான பெயர்.

சரி, ஒரு நல்ல செய்தியை கொண்டு வந்திருக்கிறேன்.

ஏமி பர்தாவை என்ன அது என்று பார்க்க. . .

நாம எல்லோரும் நாளை காலை கிளம்பி டோனாவூர் சென்று அங்கேயே நமது குடியிருப்பை அமைத்துக் கொள்ளப் போகிறோம்.

என்ன, திடீரென்று. . . அதுவும் நாளைக்கே. . . ? என்றார் ஏமி.

ஆமாம். . . . அது தான் நம் அனைவருக்கும் நல்லது. கர்த்தருடைய சித்தமும் அதுவாகதான் இருப்பதாக உணர்கிறேன் ஏமி.

அப்படியென்றால் சரிதான். நாங்கள் அனைவரும் நீங்க சொல்லும் இடத்திற்கு இப்போதே வேண்டுமானாலும் புறப்பட தயார் என்றார். எல்லோரும் ஆமோதிப்பதை போல ஆமா ஆமா என்று தலையாட்டினர்.

உவாக்கர் மற்ற அனைவரது விருப்பங்களையும் தெரிந்து கொள்ளும் பாவனையில் அனைவரையும் பார்க்க. . .

ஐயா, எந்த முடிவெடுத்தாலும் நாங்கள் சந்தோசத்தோடு உடன்படுவோம். என்று பொன்னம்மாவும் அருளாயியும் கூற மற்ற அனைவரும் மகிழ்ச்சியோடு தங்கள் உடன்பாட்டைத் தெரிவித்தனர்.

ஆனால். . . . என்ற ஏமியின் குரலை கவனித்த உவாக்கர். .

சொல்லுமா . . . . என்றார் பரிவோடு.

நாளை மாலை கிளம்பலாமே. . .

இந்த ஊர் மக்கள் நமக்கு ஒரு குடும்பம் போல எல்லா நேரங்களிலும் உதவியாக இருந்தனர். இந்த மக்களிடம் நமது முடிவை தெரிவித்துவிட்டு விடைபெருவது நல்லதாக நினைக்கிறேன் . . . அவர்கள் அனைவரையும் சந்தித்துப்பேசிவிட்டு மாலையில் செல்லலாமென்று மனம் விரும்புகிறது.

சரி. . . . அதுவும் சரிதான். . . என்றவர், இனி எல்லோரும் ஜெபம் செய்வோம் என்று அந்த அறைக்குள் வட்டமாக அமர்ந்து பாடல்கள் பாடி வழக்கம் போல செபத்தை முடித்துவிட்டு, எல்லோரும் மகிழ்ச்சியாக தூங்குங்கள். காலையில் சந்திப்போம் என்று கூறி எழுந்து தங்களது அறைக்கு செல்ல விரைந்தனர்.

ஏமியும் உடன் எழுந்து வெளியில் சென்றார். திடீர் முடிவிற்கான சரியான காரணம் இருக்குமே. . !

மூவரும் பேசிக் கொண்டே தேவாலய வாசலருகில் வந்து நின்றனர்.

ஏமி, லட்சுமி இங்கு வந்ததும். இச்செய்தி சுற்றுவட்டாரமெல்லாம் பறந்துவிட்டது. இந்நிகழ்வு சமயம் சார்ந்ததாகையால் பெரும் எதிர்ப்பு. நம்மை அழிக்க ஒரு முரட்டுக் கூட்டம் தயார் நிலையில் உள்ளதாக நமது கோயில் குட்டியார் மூலம் தகவல் வந்தது.

பெருங்குளத்திலிருக்கும் நமது சபையை சார்ந்தவர்கள் மூலம் கடுமையான எச்சரிப்புகள் வந்து கொண்டிருக்கிறது. அவர்களோடு பொன்னம்மாள், ஜெயமணி, அருளாயி, என்று இங்கு நம்மோடிருக்கும் அத்தனைபேர்களின் குடும்பங்களும் இணைந்து கொண்டன.

இந்த இக்கட்டான நிலமையில் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் என்று நம் வேதம் சொல்வதை நினைவு கூற வேண்டும்.

துணிந்து எதிர்த்தால் நமக்கு மட்டுமல்ல எதிர்த்து வரும் அம்மக்களும் பெரும் பழி பாவத்திற்கும் சாபத்திற்கும் உள்ளாகி நிற்பார்கள். அதற்கு நாம் இடமளிக்காமல் சென்று விடலாம். டோனாவூருக்கு செல்லவிருப்பது நாம் ஏற்கெனவே ஐந்தாறு மாதங்களுக்கு முன்பே எடுத்த முடிவுதானே. . ! அதற்கு இதுதான் சரியான நேரம் என்று கடவுள் சூழ்நிலைகள் மூலம் உணர்த்துவதை புரிந்து கொண்டு செயல்பட வேண்டுமல்லவா என்றார்.

ஆமாம். . . . நிச்சயமாக. ! நாம் நேரத்தைக் கடத்தாமல் முடிந்தவரை நாளை ஊர்மக்களிடம் சொல்லிவிட்டு உடனடியாக கிளம்பி விடுவோம். பிரச்சனைகளுக்கு வழிவைக்காமல் ஒதுங்கி கொள்வதே புத்திசாலித்தனம் என்றார் ஏமி.

ஏமி விடைபெற்றுக் கொண்டு தனது அறைக்குத் திரும்பினார்.

அனைவரும் பாய்களை விரித்து படுக்கையில் ஏமிக்காக காத்திருந்தனர்.

ஏமி எதையும் காட்டிக் கொள்ளாமல் புன்னகைத் ததும்ப வந்து அனைவருக்கும் நடுவில் குழந்தைகளை அரவணைத்துத்துப் படுத்திருக்கும் பாசமிகுத் தாயைப் போல் படுத்துக் கொள்ள, அனைவரும் விடியப்போகும் புது நாளை ஆவலோடு எதிர்பார்த்தனர். புதியதொரு ஊருக்கு இடம் பெயர போவதை எண்ணி புதிய உலகம் ஒன்றை காணப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் தங்கள் கற்பனைகளில் புதிய ஊரை பார்த்துவிட முயற்சிக்கவே அன்றைய தூக்கம் விலகிக் கொண்டது.

ஏமிக்குள்தான் ஏகப்பட்ட குழப்பம். எப்படி இந்தப் பயணம் தொடரப் போகிறது? கடவுளின் திட்டம் என்னவாக இருக்கும்? தான் கனவிலும் நினைத்துப் பார்க்காத இந்தப் புதிய வழிகள் என்னை எங்கு கொண்டு செல்ல போகிறது. . . ! ? ஒருபக்கம் திகைத்தாலும் அதன் மறுபக்கம் சுவாரசியங்கள் நிறைந்த ஓர் புத்தம்புது உலகிற்குள் அடியெடுத்து வைப்பதைப் போல் உணர்ந்தது ஏமியின் மனம்.

மிகச் சிறு வயதிலேயே இறை நம்பிக்கையையே தன்னம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்து பழகிவிட்ட ஏமிக்கு தற்காலிகமாக எட்டிப் பார்க்கும் குழப்பங்களெல்லாம் வரும் நாட்களில் எரியும் நெருப்பில் பொசுங்கும் புழுக்களாய் அழிந்து போகும் என்பதை அறிந்திருந்தார்.

யார் உறங்கினாலென்ன கனவுகளோடு கதைத்துக் கொண்டிருந்தால்தான் என்ன, அந்த விடியல் எவருக்காகவும் காத்துக் கிடப்பதில்லையே!

அன்று பண்ணைவிளையில் அவர்களனைவருக்கும் முன்பே அந்த செஞ்சூரியனும் பறவைகளும் கண்விழித்துக் கொண்டு தங்கள் வேலைகளில் தீவிரமாய் இறங்கியிருந்தன.

பண்ணைவிளை கிராமத்தின் மக்களுக்கு இரவு எடுக்கப்பட்ட அந்த முடிவும் செய்தியும் அதிகாலமே தெரிந்துவிட்டது. சமய சார்புடைய சில குடும்பங்களைத் தவிர மற்ற அனைவரையுமே வருத்தம் கௌவிக்கொண்டது.

உவாக்கர் அந்த ஊருக்கு வந்தது முதல், சாதி சமய பாகுபாடுகளின்றி ஏழை எளிய மக்களுக்கு பொருளாதார நிலையிலும் உதவினார். ஆதரவற்றோரின் மரணச் சடங்கையும் நிறைவேற்றியிருக்கிறார், எந்த வீட்டிலாவது குழந்தைகள் காய்ச்சல், வயிற்றுப் போக்கென்றாலோ உடனே உவாக்கர் தம்பதியினரிடம் செபம் செய்ய கொண்டு செல்வர். இரவில் தூங்காமல் அழுது அடம் பிடித்து விட்டாலே போதும் உடனே எந்த இரவானாலும் உவாக்கர் வீட்டு கதவு தட்டப்படும். முகம் கோணாமல் செபம் செய்து அனுப்பி வைப்பார் உவாக்கர்.

ஏமி வந்த பிறகு எப்போதும் அவ்வூர் பெண்களுக்கு மருத்துவராகவும், குடும்ப சண்டைகளுக்கு ஆலோசனை வழங்கும் நீதிபதிகளாகவும், பாடம் கற்பிக்கும் ஆசிரியராகவும், இருந்தனர்.

கிட்டத்தட்ட எல்லோருமே அவர்களால் பலனடைந்தவர்களாக தான் இருப்பர். அவர்கள் அங்கிருந்த நான்கு ஆண்டுகளில் அவ்வூரின் வாழ்வியல் முறையில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது.

இன்று அவர்கள் ஊரைவிட்டு வெளியேற போவதை அறிந்தும் அம்மக்கள் செயலற்று சொல்லற்று வெறுமையாய் நின்றனர். அத்தோடு அங்கு இருந்தாலும் அவர்களுக்கு ஏற்பட போகும் துன்பங்களைப் பற்றியும் அவர்கள் அறிந்தேயிருந்தனர். அதிகாலை முதலே மக்கள் கோவில் வளாகத்திற்குள் வரத் தொடங்கியிருந்தனர்.

உவாக்கர் அங்கு வந்திருந்த ஊர்ப் பெரியவர்களிடம் பேசிக் கொண்டு நின்றிருந்தார். ஏமியும் பர்தாவும் சோகத்தை மறைத்து உதட்டில் புன்னகைப் பூக்க கவலைகளை மறைக்கத் தெரியாமல் கண்கலங்கி நின்ற அந்த ஊர் மக்களிடம் கட்டாய இடம்மாற்றத் தேவையை எடுத்துக் கூறி ஆறுதல் படுத்தினர். இரண்டு மாட்டு வண்டிகள் தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. ஒன்று வில்வண்டி மற்றொன்று கூண்டு பொருத்தப்பட்ட சக்கடா வண்டி. எப்போதும் வெளியில் செல்வதற்காக வண்டி ஆயத்தமானால் ஏமிக்கு மனம் லகுவாகி குழந்தையைப் போல் மென்மையாகும். ஆனால் இன்றைக்கு முதல் முறையாக வலித்தது. அன்பின் பிரிவு சக்தி

வாய்ந்ததாயிற்றே!

ஏழு மணிக்கெல்லாம் பெரும்பாலும் அனைவரும் வந்து விட்டனர். உவாக்கர் எந்த வருத்தத்தையும் காட்டிக் கொள்ளவில்லை.

அன்பானவர்களே. . . ஆலயத்தில் பிரசங்க பீடத்தில் ஆரம்பிப்பதைப் போல கெம்பீரமாக ஒலித்தது அவர் குரல். சங்கடங்களால் சலசலத்துக் கொண்டிருந்த மக்கள் அமைதியாகினர்.

நாங்கள் இன்று கிளம்பி டோனாவூருக்கு செல்கிறோம். அது வெகு தொலைவில் இல்லை. நீங்கள் எப்போது நினைத்தாலும் அங்கு வரலாம். நாங்களும் இங்கு அடிக்கடி வருவோம். தங்கும் இடத்தைதான் மாற்றியிருக்கிறோம். ஆகவே யாருமே கவலைப்படாமல் எங்களை அன்போடு வழியனுப்பி வைக்க வேண்டும். நீங்கள் அனைவருமே எங்கள் மனதில் எப்போதும் இருப்பீர்கள். உங்கள் அனைவருக்காகவும் நாங்கள் தினமும் செபம் செய்வோம். நீங்களும் எங்களுக்காக செபித்துக் கொள்ளுங்கள். என்றார்.

ஏமி சோகத்தை தரையில் செலுத்த எண்ணி கைக்கட்டி தலைக்கவிழ்ந்து நின்றிருந்தார்.

உவாக்கர் உரையை முடிக்கவும் ஏமி தலைநிமிர்ந்து. கைக்கூப்பி உதட்டால் சிரித்து பின் வார்த்தைகள் வராமல் கை உயர்த்தி விடைபெற எண்ணினார். எங்கிருந்தோ ஒரு பெண் லேசாக அழும் குரல் கேட்கவே அவளைத் தொடர்ந்து ஒவ்வொருவரையும் அந்த அழுகைத் தொற்றிக் கொள்ள ஒரே அழுகையாகி போனது அந்த இடம்.

கண்ணீரின் அலை உவாக்கர் உட்பட அனைவரையும் வேதனையில் தள்ளி தத்தளிக்க வைத்தது. மௌனமே மொழியாய்த் தொடர கண்ணீர் மலக விடைபெற்றனர்.

உவாக்கர் தம்பதியினரோடு ஏமி, பொன்னம்மாள், அவளது மகள் பரிபூரணம், ஜெயமணி, ஜீவமணி, அருளாயி, ப்ரீனா , . . . . . என்று ஒரு சிறு நட்சத்திரக் குடும்பம் டோனாவூரை மையமாக வைத்து ஒரு திரள் கூட்ட இருளை விரட்டியடிக்க புறப்பட்டது. . !

**தொடர்ந்து மின்னும்...**

# வரலாற்றுச் செய்தி

இன்று (22-10-2022) திருநெல்வேலி திருமண்டலம் குலவணிக்கபுரம் சேகர இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்த வரலாற்றுச் மிஷன் சுற்றுப்பயணம் திருநெல்வேலி பகுதியில் வரலாற்று ஆய்வு பணிகளை வரலாற்று சங்கத்துடன் இணைந்து மேற்கொண்டார்கள். குறிப்பாக மில்டரி லைன் மற்றும் குளோரிந்தாள் ஆலய மிஷனெரி நினைவிடங்களையும் மிஷனெரிகள் செய்த பணிகளையும் வரலாற்றுச் நினைவு சின்னங்களையும், பாளையங்கோட்டை கோட்டை தடையங்களையும் ஆய்வு பணிகளை மேற்கொண்டோம். கண்டு அதிசயத்தார்கள். இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த டேவிட் வயனன் தாமஸ் அவர்களுக்கும் மற்றும் உடன் பயணித்த வரலாற்றுக் ஆய்வாளர் மாரியப்பன். நிகழ்ச்சி இறுதியில் இளைஞர்களுக்கு பல ஆலோசனைகளை வழங்கிய டாக்டர் வசுந்தரன் சீனிவாசகம் அவர்களும் வரலாற்றுச் சங்கம் சார்பில் கலந்து கொண்ட மன்னா செல்வகுமார் அவர்களுக்கும் நன்றி, உங்களுடைய திருச்சபை இளைஞர்களையும் அழைத்து வாருங்கள் திருச்சபை வரலாற்றை அவர்களும் அறிந்து கொள்ளட்டும்.







# Blessing Fashion Works

LORD YOUR TEMPLE IS HOLY INDEED FOR EVER AND EVER .Ps 93.5






## CSI & ECI CHURCH ALTAR TABLE CLOTH

- Altar Table Cloth
- Altar Back Screen
- Communion Cushion
- Pulpit & Lectern Hangings
- Stoles & Vestments
- Choir Surplice/cassocks

Branch Office

Podanur,Coimbatore,

Work Unit

Sawyerpuram,Thoothukudi

Contact

P.Asir Sugirtharaj., M.A

Sheeba Asir., M.Sc.,

**Blessing Fashion Works** **94423 48271, 7639041040**




Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401



Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401